www.padippakam.com

16-31 ஜனவரி 2001 ரூ. 5.00


# புதிய ஜனநாயகம்

காசுமீர்: சமாதான சூழ்ச்சி



அயோத்தி:

## "தமிழினத் தளபதிகளின் கரசேவை"



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தண்ணீரின் விலை - தாழ்த்தப்பட்டவனின் உயிரா?

குஜராத் மாநிலத்திலுள்ள ஷினோர் கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள், கைலாஷ்பென் என்ற தாழ்த்தப்பட்ட பெண் கிராமப் பொதுக் குழாயில் இருந்து குடிநீர் எடுத்துச் செல்ல வந்த பொழுது, அவரை நீர் எடுக்க விடாமல் தடுத்து நிறுத்தியதோடு, அவரது ஆடைகளைக் கிழித்து அவமானப்படுத்தித் துரத்தியடித்தனர். இம்மேல்சாதி வெறியர்களைக் கைது செய்யக் கோரிப் புகார் கொடுக்கச்சென்ற கைலாஷ்பென்னின் கணவர் ரமேஷ், போலீசாரால் அடித்துத் துரத்தப்பட்டார். சமூகநீதித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோ ரமேஷின் புகாரை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அவமானத்தால் துடித்துப் போன ரமேஷ், நியாயம் கிடைக்க வேண்டி, பூச்சி மருந்தைக் குடித்துத் தன்னையே மாய்த்துக் கொண்டார். இந்தத் தற்கொலைப் போராட்டத்திற்கு பிறகுதான், குஜராத் ஆளும் இந்து மத வெறிக் கும்பல் அசைந்து கொடுத்து, நடவடிக்கை எடுப்பதாக ''பாவ்லா'' காட்டி வருகிறது.

## சிறைச்சாலை சீர்திருத்தத்துக்குக் கைதிகள் படுகொலை

துருக்கி நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் அனைத்தும் பிதுங்கி வழிவதால், அரசியல் கைதிகளைத் தனிக் கொட்டடிகளில் அடைத்து வைத்து அரசினால் சித்திரவதை செய்ய முடியவில்லை. இதனால் ''சிறைச் சீர்திருத்தம்'' என்ற பெயரில் நரித்தனமான சட்டமொன்றைக் கொண்டு வந்துள்ளது, துருக்கி அரசு. இதன்படி சிறையில் அடைக்கப் பட்டுள்ள 72,000 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும். மீதிக் கைதிகள் தனியாகவோ, இரண்டு, மூன்று பேராகவோ தனித்தனி ''செல்களில்'' அடைக்கப்படுவார்கள். சீர்திருத்தம் என்ற பெயரில் வரும் இந்த அடக்குமுறையை எதிர்த்து, அந்நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் அனைத்திலுமுள்ள கைதிகள், சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கம்யூனிசப் புரட்சியாளர்கள் தலைமையில் கடந்த இரண்டு மாதங்களாகப் போராடி வந்தனர். இப்போராட்டத்தை இராணுவத்தை ஏவி விட்டு ஒடுக்கிய அரசு, சிறைக்குள் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 கைதிகள் மட்டுமே இறந்து போனதாகப் புளுகி வருகிறது.

## வேலையில்லாத திண்டாட்டம் உருவாக்கும் குற்றவாளிகள்

கடந்த (2000) ஆண்டில் மும்பய் நகரில் மட்டும், பணம் கேட்டு மிரட்டும் குற்ற வழக்கின் கீழ் 537 பேர் மும்பய் நகர போலீசால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 301 பேர் இந்தத் 'தொழிலில்' புதிதாக இறங்கியிருப்பவர்கள். மேலும், கைது செய்யப்பட்டிருப்பவர்களுள் 27 பேர் பட்டப்படிப்பும், 7 பேர் பட்ட மேற்படிப்பும் முடித்தவர்கள். 44 பேர் +2-வும், 70 பேர் பள்ளி இறுதி வகுப்பும் முடித்தவர்கள். 183 பேர் ஏழாவது தொடங்கி பத்தாம் வகுப்பு வரையும், 161 பேர் ஏழாம் வகுப்பு வரையும் படித்திருக்கின்றனர். வேலையில்லாத் திண்டாட்டமும், மாஃபியா கும்பலுக்கு சமூகத்தில் கிடைத்துள்ள அந்தஸ்தும்தான் படித்த இளைஞர்களை இந்தத் தொழிலில் இறங்கத் தூண்டுவதாகச் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். ஆனால், மாநில அரசோ, தடா போன்ற கொடிய சட்டத்தைக் கொண்டு இச்சமூகப் பிரச்சினையை ஒழித்து விடுவோம் என மார் தட்டுகிறது.

## உதவாக்கரை தீர்ப்பு

உச்சநீதி மன்றம் சமீபத்தில், ''கர்நாடக மாநில மின் வாரியம், வேலை நீக்கம் செய்யப்பட்ட 37 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும்'' என உத்தரவிட்டுள்ளது. ஆனாலும், இத்தொழிலாளர்களுள் 29 பேர் மீண்டும் பணியில் சேர்வதற்கான வாய்ப்பே இல்லை. ஏனென்றால், 21 தொழிலாளர்கள் பணியில் இருந்து ஓய்வு பெறும் வயதைத் தாண்டிவிட்டனர். 8 தொழிலாளர்கள் தீர்ப்பு வருமுன்பே இறந்து விட்டனர். மீதமுள்ள எட்டு தொழிலாளர்களும் பணி ஓய்வு பெறும் வயதை எட்டிவிட்டதால், அவர்கள் வேலையில் இருக்கப் போகும் மாதங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டு 1971-ஆம் ஆண்டு வேலையில் இருந்து துரத்தப்பட்ட இத்தொழிலாளர்களின் வழக்கு, கடந்த 29 வருடங்களாக மேல் கோர்ட், கீழ் கோர்ட் என இழுத்தடிக்கப்பட்டது. ''தாமதமான நீதி, மறுக்கப்பட்ட நீதி'' எனும்பொழுது, இத்தீர்ப்பை நீதியானது என்று கூற முடியுமா?



துருக்கி நாட்டு சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த கைதிகளின் உறவினர்கள்.

## பொறுக்கித்தனம் - போலீசின் சட்டபூர்வ உரிமையா?

மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர் மாவட்டத்திலுள்ள அர்ஜூன் - மார்சாவ் வட்டாரத்தில் இயங்கி வரும் நக்சல்பாரி புரட்சியாளர்களை நரவேட்டையாடுவதற்காக, அம்மாநில அரசு அந்தப் பகுதியில் ரிசர்வ் போலீசு படையை இறக்கிவிட்டுள்ளது. அதிரடிப்படை போலீசைப் போலவே, இந்தக் கும்பலும் தீவிரவாதிகளைப் பிடிக்கிறோம் என்ற பெயரில் கிராமப்புறப் பெண்களைக் கிண்டலடிப்பதையும், அவர்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளது. டிசம்பர் 18-ஆம் தேதி சந்தைக்கு வந்த பெண்களைக் கிண்டலடித்த இப்போலீசைத் தட்டிக் கேட்ட இளைஞரை, போலீசு நிலையத்துக்கு இழுத்துச் சென்று மிருகத்தனமாகத் தாக்கினர். இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுப் போராடினர். போராடிய பொது மக்களின் மீது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் குண்டடிபட்டு இறந்தனர்.

## அமைச்சர்களின் ஊதாரித்தனம்

பீகார் மாநிலத்தை இரண்டாகப் பிரித்து உருவாக்கப்பட்டுள்ள ஜார்கண்ட் மாநில அரசு இன்னும் முழுமையாகச் செயல்படக் கூட இல்லை. ஆனால், அதற்குள்ளாகவே புதிய அமைச்சர்களின் சொகுசு வாழ்க்கை தொடங்கிவிட்டது. அம்மாநிலத்தைச் சேர்ந்த ஆறு அமைச்சர்களுக்கு அரசாங்க வீடு ஒதுக்கப்படாததால், அவர்கள் அனைவரும் ஐந்து நட்சத்திர விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநிலம் தொடங்கிய ஒரு மாதத்திற்குள்ளாகவே இதற்கு ஆன செலவு மட்டும் பத்து லட்ச ரூபாய்; அவர்கள் ஐந்து நட்சத்திர விடுதியில் தின்று தீர்த்த செலவு கணக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய். புதிய மாநிலம் உருவானதில் ஜார்கண்ட் மக்கள் கைமேல் கண்ட பலன் இந்த ஊதாரித்தனம்தான்!

## கடனை அடைக்க கடன் வாங்கும் அவலம்

உலக வங்கி இந்தியாவுக்கு வழங்கவுள்ள கடன் தொகையை 300 கோடி அமெரிக்க டாலரிலிருந்து 400 கோடி அமெரிக்க டாலராக உயர்த்தித் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளது. இந்தக் கடன் தொகை முழுவதையும் எய்டஸ் ஒழிப்பு போன்ற சமூகநலத் திட்டங்களுக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று நிபந்தனையும் விதித்தது. இப்படிபட்ட நல்ல உள்ளம் கொண்டதா உலக வங்கி என்பது போல இது வெளிப்பார்வைக்குத் தெரிந்தாலும், இந்தக் கடன் உயர்வின் பின்னே உள்ள காரணமே வேறு. கடந்த ஏப்ரல் தொடங்கி ஆகஸ்டு முடிய

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 4-5**

1 சன. 2001 - 31 சன. 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# காசுமீர்: மீண்டும் சமாதான நாடகம்

காசுமீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி என்ற பெயரில் மீண்டும் போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை நாடகம் தொடங்கி இருக்கிறது. இந்த முறை, ரம்லான் மாதத்தில் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக நவம்பர் 19-ந் தேதி இந்தியப் பிரதமர் வாஜ்பாயி ஒரு தரப்பாக அறிவித்தார். அதை ஏற்றுக் கட்டுப்பாட்டு எல்லை நெடுகிலும், ''அதிகபட்சம் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க''ப் போவதாக பாக். அரசும் அறிவித்தது. அதோடு, இந்தியா - தீவிரவாதிகள் - பாக். ஆகிய முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஒரு தளத்தை உருவாக்கும் வகையில் ஆலோசனை கலப்பதற்காக பாகிஸ்தான் வரும்படி குரியத் மாநாட்டுத் தலைவர்களுக்கு அந்த அரசு அழைப்பு விடுத்தது.

''எல்லைக்கு அப்பால் இருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதத்தை நிறுத்தினால் ஒழிய பாக்.குடன் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை'' என்றும், ''முத்தரப்புப் பேச்சுவார்த்தையை ஏற்க மாட்டோம்'' என்றும் கூறும் இந்திய அரசு, அதேசமயம், ''ஒரு கூட்டுப் பேச்சுவார்த்தையில் இந்தியா உறுதியாக இருக்கிறது'' என்று கூறுவதோடு, குரியத் மாநாட்டுத் தலைவர்கள் பாகிஸ்தான் சென்று வருவதற்குக் கடவுச் சீட்டுத் தருவதற்கும் ஒப்புக் கொண்டுவிட்டது. பிரதமரின் அலுவலக அதிகாரி ஆர்.கே. மிஸ்ரா என்பவரை அறிவிக்கப்படாத தூதராக நியமித்து, குரியத் தலைவர்களுடன் இரகசியப் பேச்சுவார்த்தை - பேரங்களும் நடத்துகிறது.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு காசுமீர் பிரச்சினை குறித்துப் பேசி வந்த அதன் திட்டம் - கொள்கைகள் எல்லாம், தற்போது படுதோல்வி அடைந்துவிட்டன. ஆட்சிக்கு வந்த பிறகு அது மேற்கொள்ளும் நடைமுறையெல்லாம் பச்சோந்தித்தனமான சந்தர்ப்பவாதமும் அமெரிக்க எஜமானின் கோலசைவுக்கு ஆடுவதாகவும்தான் உள்ளன. ''பாக். வசமுள்ள காசுமீர் பகுதியை இராணுவ நடவடிக்கை மூலமாக மீட்பது; எல்லைக்கப்பால் இருந்து வரும் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்களைக் குண்டு வீசித் தகர்ப்பது; அவர்கள் மீது இராணுவத் தாக்குதல், அணு குண்டுத் தாக்குதல்தான் ஒரே தீர்வு; திருந்தவே திருந்தாத இசுலாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட காசுமீரில் இந்துக்களைக் குடியேற்றி இந்துமயமாக்குவது; அதற்குத் தடையாக உள்ள இந்திய அரசியல் சட்டப்பிரிவு 370-ஐ இரத்து செய்வது; பாக்.குடனோ, பயங்கரவாதிகளுடனோ பேச்சுவார்த்தையே கிடையாது'' - இவைதான் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் வந்த பின்பு சில மாதங்களாகவும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் நிலை.

பாக். வசமுள்ள காசுமீரை மீட்பதே தமது இலட்சியம் என்று சவடால் அடித்து வந்ததை ஆர்.எஸ்.எஸ். கும்பல் கைவிட்டு, இப்போது, இராணுவக் கட்டுப்பாட்டுக் கோட்டின் புனிதத்தைக் காக்கப் போவதாகவும், அதையே எல்லையாக ஏற்குமாறும் மாறிவிட்டது. 370-ஆவது அரசியல் சட்டப்பிரிவை அடியோடு இரத்து செய்வதைக் கைவிட்டு, அதைப் பராமரிப்பதோடு, 1975-ஆம் ஆண்டின் இந்திரா - ஷேக் அப்துல்லா ஒப்பந்தத்தையும் ஏற்பதாகக் கூறுகிறது. காசுமீர்ப் பிரிவினைவாதிகளோடு பேச்சுவார்த்தையே நடத்த மாட்டோம் என்று வீராப்புப் பேசியவர்கள், இப்போது பாக். உளவுப்படையினரால் இயக்கப்படும் தீவிரவாதக் குழுக்களுடன் கூட இரகசியப் பேச்சுவார்த்தை - பேரங்கள் நடத்துகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம், காசுமீரில் நீடித்து வரும் அறிவிக்கப்படாத போரில், அடுத்தடுத்துப் பல தோல்விகளையும் இழப்புகளையும் இந்திய இராணுவம் சந்தித்து வருகிறது. குறிப்பாக, கார்கில் போரில் பேரிழப்புகளைச் சந்தித்தது. ஐந்து இலட்சம் துருப்புகளையும், நவீன ஆயுதங்களையும் ஈடுபடுத்தியும் சில ஆயிரம் பேரான ''காசுமீர்ப் போராளி''களை ஒடுக்க முடியவில்லை. அதேசமயம் இந்தியாவின் அரசு பயங்கரவாத, மனித உரிமை மீறல்கள் உலக அளவில் அம்பலப்பட்டு, உலக நாடுகளிடையே இந்தியா தனிமைப்பட்டுப் போனது. காசுமீர்ப் பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரம், பாகிஸ்தான் உட்பட வேறு எந்த நாடும் தலையிட உரிமையில்லை என்று ஒருபுறமும், இந்தியா - பாக். தவிர வேறு எந்த மூன்றாவது நாடும் தலையிடக் கூடாது என்று மறுபுறமும் கூறி வந்த இந்திய அரசு, அமெரிக்க மேல்நிலை வல்லரசின் தலையீட்டை ஏற்றுக் கொண்டுவிட்டது.

அமெரிக்காவின் நிர்ப்பந்தங்கள் காரணமாக, கார்கில் போரை ஒரு தரப்பாக

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

www.padippakam.com



# இந்து மதவெறியர்களின் தாக்குதல் மதச்சார்பற்ற கட்சிகளின் முணுமுணுப்பு

**பா**பர் மசூதி இடிக்கப்பட்ட நினைவு நாளையொட்டி, காங்கிரசுக் கட்சி நாடாளு மன்றத்தில், ''பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப் பட்டுள்ள அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, உமாபாரதி ஆகிய மூவரும் தங்களின் அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும்'' எனக் கோரியது.

காங்கிரசின் இத்தாக்குதலுக்கு பா.ஜ.க.வின் பத்திரிகை தொடர்பாளர் விஜய்குமார் மல்கோத்ரா, ''அத்வானி தலைமை தாங்கி நடத்திய அயோத்தி இயக்கம், மகாத்மா காந்தி தலைமையில் நடந்த சுதந்திரப் போராட்ட இயக் கத்தைப் போன்றது; அது, ஓர் அர சியல் இயக்கம். அத்வானி மேல் போடப்பட்ட வழக்கும் ஊழல் குற்றச்சாட்டு போன்ற கிரிமினல் குற்றச்சாட்டு வழக்கு அல்ல. எனவே, அவர்கள் பதவி விலக வேண்டியதில்லை'' எனப் பதிலடி கொடுத்தார்.

பா.ஜ.க.வை எதிர்க்கும் மதச் சார்பற்ற கட்சிகள் சமய சந்தர்ப்பம் பார்த்து எழுப்பி வரும் இப்பிரச்சினைக்கு, பா.ஜ.க. திமிரோடு கொடுக்கும் வழக்க மான பதில்தான் இது. ஆனால், இம்முறை இப்பிரச்சினையைச் சூடாக்கியவர், ''தவறான கட்சியில் இருக்கும் சரியான நபர்'' என்று வருணிக்கப்படும் வாஜ்பாயி.


பாபர் மசூதி இடிக்கப்பட்ட கருப்பு தினமான டிசம்பர் 6 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் வாஜ்பாயி, ''அயோத்தி நிகழ்ச்சி நிரல் இன்னும் முடிவடை யவில்லை; ராம ஜென்மபூமி இயக்கம், தேசிய உணர்வின் வெளிப்பாடு'' என்று இந்து மதவெறியைக் கக்கினார்.

அமைச்சர்களின் பதவி விலகல் பற்றிப் பேசிய வாஜ்பாயி, ''அவர்கள் (அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமாபாரதி) அதை காப்பதற்குதான் அயோத் தியில் இருந்தார்கள்; அதை இடித்துத் தள்ளுவதற்கு அல்ல'' என்று எவ்விதத் தயக்கமும் இன்றி வரலாற்றைப் புரட்டிப் போட்டார்.

மறுநாள் வாஜ்பாயி நாடாளுமன் றத்தில், ''அயோத்தி பிரச்சினையைத் தீர்க்க இரு வழிகள் உள்ளன. ஒன்று, பிரச்சினைக் குரிய இடத்தில் ராமர் கோயிலைக் கட்டுவ தற்குச் சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும்; இரண்டாவது, இந்து முசுலீம் மதத்தினர் ஒன்றுகூடிப் பேசி, 'முசுலீம்கள், ராமர் கோவில் இருந்த இடத்தில் கோயிலைக் கட்டிக் கொள்ள இந்துக்க ளுக்கு அனுமதி அளிக்கும்படி முடிவு எடுக்கவும், இந்துக்கள், மசூதியைக் கட்டிக் கொள்ள முசுலீம்களுக்கு மாற்று இடம் தரவும்' முன் வர வேண்டும்'' என்றார். ''கோவிலை, அது ஏற்கனவே இருந்த இடத்தில்தான் கட்ட வேண்டும்; மசூதியை வேறு எங்காவது கட்டிக் கொள்ளுங்கள்'' என்றும் கூறித் தனது இலட்சியக் கனவைப் புட்டு வைத்தார்.

பாபர் மசூதியை இடிப்பதற்கு முன், இந்து மதவெறியர்கள் அயோத்தியில் செங்கற்களைக் குவிக்க அனுமதிக்கப் பட்டது போல (மேல்படம்), இப்பொழுது ராமர் கோவிலைக் கட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட தூண்களை (கீழ்படம்) அடுக்கி வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.






தி.மு.க.வும், ம.தி.மு.க.வும், பா.ம.க.வும் வாஜ்பாயின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கமுக் கமாக இருக்க, தெலுங்கு தேசமும், திரிணாமுல் காங்கிரசு தலைவி மம்தா பானர்ஜியும் அப்பாவி களைப் போல, ''எங்களுக்கு மேலும் விளக்கம் வேண்டும்'' என்றார்கள். இதற்கு மேலும் விளக்கம் வேண்டுமென்றால், வாஜ்பாயி கொத்துக் கரண்டியை எடுத்துக் கொண்டு அயோத் திக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

★★★

**பா**பர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவோம் என்று பிரச்சாரம் செய்துதான், இந்து மதவெறி அமைப்புகள் அம்மசூதியை இடித்துத் தள்ளின. மசூதி இடிக்கப் பட்டவுடன், மீண்டும் அதே இடத்தில் மசூதியைக் கட்டித் தருவோம் என காங்கிரசு கட்சி வீறாப்பாக அறிவித்தது. மசூதி இடிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ''பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமர் கோவில்தான் கட்ட வேண்டும்; மசூதியை வேறு எங்காவது கட்டிக் கொள்ளுங்கள்'' என்று மசூதி இடிக்கப்படுவதற்கு முன் பேசி வந்ததைத்தான் இப்பொழுதும் வாஜ்பாயி பேசுகிறார். ஆனால், ''அந்த (பிரச்சினைக்குரிய) இடத்தில் மசூதியைக் கட்ட முடியும் என்று யாராவது சொல்லத் தயாரா?'' என நாடாளு மன்றத்தில் அத்வானி சவால்



படிப்பகம்

விட்ட பொழுது, காங்கிரசிடம் மூச்சு பேச்சையே காணோம்!

பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து வரும் அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும், இப்பிரச்சினைக்கு முடிவு சொல்வதை நீதிமன்றத்திடம் தள்ளிவிட்டு ஒதுங்கிக் கொண்டுவிட்டன. முசுலீம் மதத் தீவிரவாத அமைப்புகளைத் தவிர, பிற முசுலீம் மதவாத ஓட்டுக் கட்சிகள்கூட, பாபர் மசூதியை- மீண்டும் கட்டித்தர வேண்டும் எனக் கோருவதில்லை. பெரும் பான்மையான இந்திய நாட்டு மக்க ளுக்கோ, பாபர் மசூதி விவகாரம் டிசம்பர் மாத முதல் வாரத்தில் போலீசு நடத்தும் கெடுபிடிகளால்தான் நினைவுக்கே வரு கிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கு விசாரணை கடந்த எட்டாண்டு களாக நடந்து வருகிறது. ''ஆனாலும், அந்த விசாரணையில் இதுநாள் வரை எந்தவொரு பெரிய முன்னேற்றமும் ஏற்பட்டு விடவில்லை. விசாரணை முடிந்து தீர்ப்பு எந்தக் காலத்தில் வரும் என்று யாருக்கும், நீதிபதிகளுக்குக் கூடத் தெரியாது. மசூதியைப் பாது காக்க வேண்டிய பொறுப்பை இந்து மதவெறியன் கல்யாண் சிங்கிடமே ஒப்படைத்த நீதி மன்றத்திடமிருந்து, பாபர் மசூதி யை இடித்துச் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோவி லைச் சட்டபூர்வமாக அங்கீகரித்து விட்ட நீதிமன்றத்திடமிருந்து, ''அந்த இடத்தில் மீண்டும் மசூதிதான் கட்டப்பட வேண்டும்'' என்ற நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்பதற்கு அடிப்ப டையே கிடையாது. ஆனாலும், ''நீதிமன்றத்திடமிருந்து நியாயம் கிடைக்கும்; அந்தத் தீர்ப்பை இந்து மதவெறியர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என மதச்சார் பற்ற கட்சிகள் பசப்பி வருகின்றன.



இராஜஸ்தான் - ஆஜ்மீரில் உள்ள குவாஜா மொய்னுதின் சிஸ்டியின் கல்லறையில் வழிபாடு நடத்தும் அத்வானி: 'மிதவாத' வாஜ்பாயிக்கு போட்டியா?

ராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்பதற்காக பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய இந்து மதவெறி அமைப்புகளும், ''நல்லபடியாக, நமக்குச் சாதகமாகத் தீர்ப்பு வரட்டும்; அதுவரை ராம நாமத்தை மட்டும் ஜெபித்துக் கொண்டு இருப்போம்'' என சும்மா உட்கார்ந்து கொண்டு, உருத்திராட்சக் கொட்டையை உருட்டிக் கொண்டா இருக்கிறார்கள்? டிசம்பர் 6-ஆம் தேதியை ''இந்து எழுச்சி'' நாளாகக் கொண்டாடும் பொழுது மட்டும்தான், அவர்களுக்கும் ராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்ற இந்து உணர்வு பொங்கி வழிகிறதா?

விசுவ இந்து பரிசத்தின் உதவித் தலைவர் கிரிராஜ் கிஷோர், ''எங்களைப் பொருத்தவரை, இராமர் கோயிலுக்கான போராட்டத்தைத் திரும்பவும் புதுப்பிக்க வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால், நாங்கள் அந்தப் போராட் டத்தை ஒரு நாளும் நிறுத்தியதில்லை'' என்று பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தி ருக்கிறார். நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாகக் கூறும் வாஜ்பாயிதான், ''நீதி மன்றம் ராமருக்குக் கோயில் கட்டுவதற்குச் சாதகமாகத் தீர்ப்பு வர வேண்டும்'' என ஆலோசனை கூறுகிறார். வி.இ.ப.வின் மற்றொரு தலைவர் பரமஹம்ஸ், ''அர சியல் சாசனமோ, சட்டமோ, அரசாங் கமோ, பிரதம மந்திரியோ எங்கள் வேலை களைத் தடுத்து நிறுத்த முடியாது'' எனக் கூறுகிறார். அதாவது, இந்துவெறி அமைப் புகள் நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்க வுமில்லை; பிரச்சினையை ஆறப் போட்டு விடவுமில்லை.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு ராமர் கோயிலுக்காக கல் - பளிங்குத் தூண்கள் தயாரிக்கப்பட்டு வருவது நாடெங்கும் தெரிய வந்தது. 1991 தொடங்கி நடந்து வரும் இந்த வேலைகள், இதுநாள்வரை எந்தவொரு அரசாங்கத் தாலும் தடை செய்யப்படவில்லை. தீர்ப்பு வருவதற்கு முன்னரே தொடங்கப்பட்டு நடந்து வரும் இந்தப் பணிகளை நீதிமன் றமும் கண்டு கொள்ளவேயில்லை. இரண் டாண்டுகளுக்கு முன்பு, மதச்சார்பற்ற கட்சிகள் அனைத்தும் வாஜ்பாயி அரசு இந்தத் தயாரிப்புப் பணிகளைத் தடை செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் கூச்சல் போட்டுவிட்டு, இதை அடியோடு மறந்துவிட்டன. ஆனால், நாடாளுமன் றத்தில் இந்தப் பிரச்சினை பேசப்பட்ட பிற குதான், இந்தத் தயாரிப்புப் பணிகள் முன்னைவிட வெகு தீவிரமாக நடந்து வரு கின்றன.

இராசஸ்தான் மாநிலத்தில் பிந்த்வாரா எனுமிடத்தில் மட்டும் நடந்து வந்த தூண் தயாரிப்புப் பணிகள், இப்பொழுது மக்ராணா என்ற கிராமத்திலும் நடந்து வரு கிறது. அயோத்தியில், இந்து மதவெறியர் களால் கரசேவைபுரம் என்று அழைக்கப் படும் பகுதியில் தூண்கள் தயாரிக்கப்படு கின்றன.

கிட்டதட்ட 135 தொழிலாளர்கள் தூண் தயாரிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். இரு ஆண்டுகளுக்கு முன்பு இந்த எண்ணிக்கை 100 ஆக இருந்தது. கடந்த ஆறு ஆண்டுகளில் மட்டும் 56 தூண்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1991 தொடங்கி 1998 முடிய ஏழாண்டுகளில் தயாரிக்கப்பட்டி ருந்த தூண்களின் எண்ணிக்கை ஐம்பது தான் என்ற கணக்கோடு ஒப்பிட்டு, கடந்த இரண்டாண்டு களில் வேலை நடந்து வரும் மும்ம ரத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

ராமர் கோவிலைக் கட்டுவ தற்குத் தேவையான 212 தூண்களில்; 106 தூண்கள் (சரி பாதி வேலை) முடிவடைந்துவிட் டதாக விசுவ இந்து பரிசத் அறி வித்துள்ளது. ராமர் கோவிலைக் கருவறையில் இருந்துதான் கட்டத் துவங்குவோம் என இந்து மதவெ றியர்கள் திட்டமிட்டிருப்பதற்கு ஏற்ப, கருவறையைக் கட்டுவ தற்குத் தேவையான தூண்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு, பாபர் மசூதி வளாகத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

2001-இல் ராமர் கோவில் கட்டுமானப் பணிகள் துவங்கப் படும்; இதற்கான தேதி சனவரி மாதம் நடைபெறவுள்ள கும்ப மேளாவில் அறிவிக்கப்படும் என்றும் வி.இ.ப. தெரிவித்துள்ளது. கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு 6 இலட்சம் கிராமங்களில் இருந்து கரசேவகர்கள் திரட் டப்படுவார்கள்; கட்டுமானப் பணிகள் தொடங்குமுன், பளிங்குக் கல்லால் ஆன ராமர் சிலையை வைத்து, ஜெய்ப்பூரில் இருந்து அயோத்தி வரை ''ஷோபா யாத்திரை'' நடத்தப்படும் என்றும் வி.இ.ப. தனது செயல் திட்டங்களை அறிவித்துள் ளது. இது ஒருபுறமிருக்க, கட்டுமானப் பணியில் ஈடுபடவுள்ள கரசேவர்களுக்குப் பயிற்சி அளிக்க அயோத்தியில் விடுதி யொன்று கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் 200 பேர் கொண்ட 15 குழுக் களுக்கு இதுவரை பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.

www.padippakam.com

பாபர் மசூதியை இடிக்க கரசேவர்களைத் திரட்டுதற்கு அத்வானி தலைமையில் 1989-இல் ரத யாத்திரை; இப்பொழுது கோயிலைக் கட்ட கரசேவகர்களைத் திரட்டுவதற்கு ராமர் சிலையை வைத்துக் கொண்டு ஷோபா யாத்திரை. 1989-இல், பூஜை நடத்தப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு, பாபர் மசூதி அருகே செங்கலைக் கொண்டு வந்து கொட்டினார்கள். இப்பொழுது ராமர் கோயிலைக் கட்டத் தூண்களைக் கொண்டு வந்து அடுக்குகிறார்கள். 1992-இல் பாபர் மசூதியை இடிக்க கரசேவகர்களுக்குப் பயிற்சி; இப்பொழுது கோயிலைக் கட்டப் பயிற்சி. ஆக, இவையனைத்தும், சதித்தனமான முறையில் பாபர் மசூதியை இடித்துத் தள்ளியதைப் போல, அந்த வழியில் நிரந்தரமாக இராமர் கோயில் கட்டிவிட, இந்து மதவெறி அமைப்புகள் திட்டமிட்டு இயங்கி வருவதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

மசூதியை இடித்ததைப் போல கோயிலை ஒரே நாளில் கட்டிவிட முடியாது என்று இந்து மதவெறியர்களைச் சாதாரணமாக எடை போடுகிறவர்களுக்கு, வி.இ.ப. தலைவர் அசோக் சிங்கால் இப்படி பதில் சொல்கிறார்: ''அயோத்தி, பைசாபாத் நகரங்களைச் சுற்றி 25 கிலோமீட்டர் தொலைவுக்குள் எந்தவொரு போலீசு படையும் நெருங்க முடியாதபடி, அந்த நகரங்களைத் துண்டித்துவிடத் திட்டங்கள் தயார்.''



வாஜ்பாயின் இந்து மதவெறி பேச்சைப் பற்றி 'விளக்கம்' கேட்டு நடந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம்.

''அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்ட வேண்டும்'' என வாஜ்பாயி பேசியவுடன், நாடாளுமன்றத்தை முடக்கி, தங்களின் வீரத்தைக் காட்டிய காங்கிரசும், கம்யூனிஸ்டுகளும் நாடாளுமன்றத்திற்கு வெளியே, ராமர் கோயிலைக் கட்டுவதற்கு வெகு மும்முரமாக நடந்துவரும் இந்தத் தயாரிப்பு பணிகளையும் முடக்கிக் காட்டலாமே! சீட்டு பேரம் பேசுவதற்காக இலட்சக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, மாநாடு, பேரணி நடத்தி தங்களின் பலத்தைக் காட்டும் (மதச்சார்பற்ற) ஓட்டுக் கட்சிகள், தங்களின் தொண்டர் படையைத் திரட்டிக் கொண்டு தயாரிப்புப் பணிகள் நடைபெறும் இடத்துக்குப் போய் தங்களின் பலத்தைக் காட்ட வேண்டியதுதானே! எந்தவொரு (மதச்சார்பற்ற) ஓட்டுக் கட்சிக்கும் இந்து மதவெறியர்களோடு நேருக்கு நேராக தெருவில் மோதும் தைரியம் கிடையாது. இவர்கள் அனைவரும் குண்டு சட்டிக்குள் (நாடாளுமன்றத்திற்குள்) குதிரை ஓட்டத்தான் லாயக்கு!

தேசிய ஜனநாயக் கூட்டணியில் உள்ள மதச்சார்பற்ற கட்சிகளோ, வாஜ்பாயின் இந்து மதவெறிப் பேச்சைக் கண்டிக்கக் கூடத் திராணியற்று பேடித்தனமாக நடந்து கொண்டன. அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டுள்ள தமிழினப் பிழைப்புவாதிகளோ இன்னும் ஒருபடி மேலே போய், தங்களின் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டனர்.

வை.கோ., பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அத்வானியை, ''கடமை தவறாத மனிதன்'' எனப் புகழ்ந்தார்.

வாழப்பாடி விவகாரத்தை வைத்துக் கொண்டு அ.தி.மு.க.வுக்குத் தாவி விடுவேன் என மிரட்டிக் கொண்டிருக்கும் போராளி இராமதாசு, இந்தப் பிரச்சினையில் வாஜ்பாயிக்கு எதிராக ஒரு வார்த்தைகூடப் பேசாமல், மௌனமாக இருந்து, பெருந்தன்மையோடு நடந்து கொண்டார்.

''தேசிய ஜனநாயகக் கூட்டணி மதச்சார்பற்றது; ஆனால், அதில் உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான பார்வை உண்டு'' எனக் கூறி, பா.ஜ.க.வின் இந்து மதவெறிக்கு ஜனநாயக உரிமை வழங்கினார், கருணாநிதி. அதனால்தான், இந்து மதவெறி பா.ஜ.க., தனது இரகசியத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ''மதச்சார்பற்ற'' தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசையே பயன்படுத்திக் கொள்கிறது. இதற்கு கூட்டணியில் உள்ள மதச்சார்பற்ற கட்சிகளின் பதவி ஆசை ஒத்தாசையாக உள்ளது.

''உ.பி.யில் சட்டமன்றத் தேர்தல் வரப் போகிறது; அம்மாநிலத்தில் சரிந்து கிடக்கும் பா.ஜ.க.வின் செல்வாக்கைத் தூக்கி நிறுத்த, இந்து மதவெறியர்களுக்கு அயோத்தி பிரச்சினை தேவைப்படுகிறது. அதனால்தான், ஆர்.எஸ்.எஸ். தூண்டுதலால், மிதவாதி வாஜ்பாய்கூட ராமர் கோயில் கட்ட வேண்டும் என்று பேசுகிறார்'' என இப்பிரச்சினை சூடு பிடித்ததற்குக் காரணம் கூறப்படுகிறது.

அயோத்தியில் ராமர் கோயில்தான் கட்ட வேண்டும் எனப் பேசிய வாஜ்பாயியை, மதமாற்றம் தொடர்பாக தேசிய விவாதம் நடத்தப்பட வேண்டும் எனப் பேசிய வாஜ்பாயியை, (அமெரிக்காவில்) ''நான் ஆர்.எஸ்.எஸ். காரன்தான்'' என அடித்துப் பேசிய வாஜ்பாயியை, இன்னமும் மிதவாதி எனக் கூறுவதைப் போல மோசடித்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

உ.பி. தேர்தலுக்கும் அயோத்தி பிரச்சினைக்கும் முடிச்சுப் போடுவதோ, இந்து மதவெறி பாசிசத்தைக் குறைவாக மதிப்பிடுவதாகும். இந்து மதவெறியர்களுக்கு அயோத்தி பிரச்சினை தேர்தலுக்கு தேர்தல் மேல்சாதி இந்து ஓட்டுக்களைக் கவருவதற்கான துருப்புச் சீட்டும் மட்டும் அல்ல. அது, இந்து ராஷ்டிரக் கனவின் உயிர்நாடி.

அதனால்தான் கூறுகிறோம், தேர்தல்களின் மூலம் இந்து மதவெறியர்களோடு கணக்குத் தீர்த்துவிட முடியாது. போலீசு, நீதிமன்றம் ஆகிய அரசு இயந்திரம்கூட இந்து மதவெறிப் போதையில் மூழ்கிப் போயிருக்கும்போது, சட்டத்தினால் அவர்களைத் தண்டித்துவிட முடியாது. மதச்சார்பற்ற, புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் தலைமையில் உழைக்கும் மக்கள் ஆர்.எஸ்.எஸ். கும்பலோடு நேருக்கு நேர் மோதுவதன் மூலம் மட்டுமே, அவர்களை வீழ்த்த முடியும்!

• செல்வம்


படிப்பகம்

## தலையங்கம் தொடர்ச்சி

நிறுத்திக் கொண்டு, பேச்சுவார்த்தைக்கு முயன்று தோல்வி கண்டது, இந்திய அரசு. இப்போது மீண்டும் அமெரிக்க ஏற்பாட்டின்படி அமெரிக்க வர்த்தகரான மன்சூர் இஜாஸ், இந்தியா - பாக். அரசுச் செயலர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்திய உளவுப்படை ''ரா''வின் பாதுகாப்போடு காசுமீருக்குப் போய் ''போராளி''க் குழுக்களைச் சந்தித்து, அமெரிக்காவின் திட்டத்தையும் விளக்கியுள்ளார். அதன் தொடர்ச்சியாக ரமலான் போர் நிறுத்தத்தை இந்திய அரசு அறிவித்து, பின்னர் ஜனவரி 26 வரை மேலும் நீடித்தது. அமெரிக்க அரசுத்துறைத் துணைச் செயலாளரும் இதை வரவேற்று அங்கீகரித்துள்ளார். இந்தியாவைப் போல, பாக்.கும் அமெரிக்க நிர்பந்தத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்ற போதிலும், காசுமீர்ப் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்குவதிலும் மூன்றாம் நாட்டைத் தலையிடச் செய்வதிலும் அது மேற்கொண்ட முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகவே அமைந்துவிட்டது.

மொத்தத்தில், இராணுவத் தீர்வு மட்டுமல்ல, இந்திய அரசின் பேச்சுவார்த்தைக்கான தீர்வும் சாத்தியமானதாக இல்லை என்பதே யதார்த்தமாகும். இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தோதாக எந்தவொரு அமைப்பும் காசுமீரில் கிடையாது. குரியத், மாநாட்டு அமைப்பில் காசுமீருக்கு சுயநிர்ணய உரிமை கோரும் ஜம்மு - காசுமீர் விடுதலை முன்னணி முதல் இசுலாமிய அடிப்படைவாத - பாக். ஆதரவுக் கும்பல் வரை பல்வேறு சக்திகளும் உள்ளன. அதற்கு வெளியே பல பாக். ஆதரவு கைக்கூலி அமைப்புகள்தாம் உள்ளன. போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை முயற்சி அமலுக்கு வரவே எல்லா அமைப்புகளையும் சம்மதிக்க வைத்து மேசைக்கு அழைக்க வேண்டும். இந்திய அரசினால் இதைச் சாதிக்க முடியாது. பாகிஸ்தானோ ஜ.கா.வி. முன்னணி தவிர, அனைத்து அமைப்புகளையும் கட்டுப்படுத்த முடியும் என்றாலும், ஒருபுறம் அமைதிப் பேச்சுவார்த்தை, மறுபுறம் அறிவிக்கப்படாத போரை நீடிக்கவே பாக். அரசு விரும்புகிறது. அதுதான் இப்போது காசுமீரில் நடக்கிறது.

அதேசமயம், இந்தியாவுக்குப் பல வகையிலும் பாதகமான நிலைமையே உள்ளது. கார்கில் போருக்குப் பிறகு முன்பைவிடக் கூடுதலாக 23% அளவுக்கு இராணுவச் செலவுகளை அதிகரிக்கும்படி நிர்பந்திக்கப்பட்டுள்ளது. கார்கில் போன்ற ஆளரவமற்ற பனிப் பிரதேசங்களைக் காப்பது எளிதாக இல்லை. இசுலாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு இந்திய இராணுவத்தினர் பலியாவது அதிகரித்திருக்கிறது. தில்லி செங்கோட்டைக்குள்ளாகவே புகுந்து தாக்குதல் நடத்துமளவு காசுமீர் தீவிரவாதிகள் வளர்ந்து விட்டனர். இராணுவத் தளபதி வி.பி. மாலிக் ஓய்வு பெறும்போது, ''உள்நாட்டு விவகாரங்களில் இராணுவத்தை ஈடுபடுத்தக் கூடாது. காசுமீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார். இதையெல்லாம் மூடிமறைத்து, ஒன்று இராணுவ ரீதியாக பெரும் வெற்றி கிட்டிவிட்டது. காசுமீர்ப் பயங்கரவாதிகள் தனிமைப்பட்டு ஓடுவதாகவும் அல்லது, இதோ காசுமீர்ப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு வந்துவிட்டதாகவும் இந்திய வெளியுறவு - உள்ளுறவு அமைச்சகங்கள் தினமும் புளுகுகின்றன. செய்தி ஊடகங்களும் அதை அப்படியே வாந்தியெடுக்கின்றன. ஆனால், காசுமீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதைத் தவிர வேறு போலியான எந்தத் தீர்வும் நிச்சயம் வெற்றி பெறாது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகப் போகிறது.

# வெண்மணித் தியாகிகளின் நினைவாக...

நாகை மாவட்டம் கீழ்வெண்மணி கிராமத்தில், 1968-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் நாளன்று நிலப்பிரபுத்துவச் சுரண்டல் - ஆதிக்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில், 44 தாழ்த்தப்பட்ட மக்கள் குடிசையில் அடைக்கப்பட்டு நிலப்பிரபுக்களால் உயிரோடு கொளுத்தப்பட்ட கொடுமை நடந்து 32 ஆண்டுகளாகிவிட்டன. வெண்மணி படுகொலைக்குக் காரணமான கோபாலகிருஷ்ண நாயுடு என்ற நிலப்பிரபு, சிறையிலிருந்து விடுதலையான போது அவருக்கு வரவேற்பு அளித்து, தனது வர்க்கப் பாசத்தைக் காட்டியவர்தான் கருப்பையா மூப்பனார். பார்ப்பன - பாசிச ஜெயா மற்றும் பண்ணையார் மூப்பனார் கும்பலுடன் கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்க போலி கம்யூனிஸ்டுகளும் பிழைப்புவாத ''தலித்'' தலைவர்களும் கிளம்பிவிட்டனர். இத்துரோகிகளை அம்பலப்படுத்தியும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கக் கொடுமையைத் தகர்த்தெறியும் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க நக்சல்பாரி பாதையில் அணிதிரள அறைகூவியும், வெண்மணித் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி இவ்வர்க்கப் போராட்ட நாளை விவசாயிகள் விடுதலை முன்னணி நினைவு கூர்ந்தது.

★ வேதாரண்யம் வட்ட வி.வி.மு. சார்பில், வெண்மணித் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி, அத் ''தியாகிகளின் இலட்சியம் நிறைவேற சாதிச் சங்கங்களையும் போலி கம்யூனிஸ்டுகளையும் புறக்கணித்து நக்சல்பாரி புரட்சிப் பாதையில் அணிதிரள்வோம்!'' என்ற முழக்கத்துடன் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் பகுதிகளில் பரவலாக சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்காக அவதாரம் எடுத்துள்ளதாகக் கூறிக்கொண்டு இப்பகுதியில் ஆரவாரமாகப் பொதுக் கூட்டங்கள் நடத்திய எந்தவொரு ''தலித்'' அமைப்பும், வெண்மணித் தியாகிகள் நினைவு நாளில் எந்த நிகழ்ச்சியும் நடத்தாமல் முடங்கிக் கிடந்தன. வேதாரண்யத்தில் வெண்மணி நினைவு நாளை ஒட்டி வி.வி.மு. சார்பில் நடந்த அரங்கக் கூட்டத்தில், சவுக்கடியும் சாணிப்பாலும் நிலவிய அன்றைய நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடிய கம்யூனிஸ்டுகளின் வீர வரலாற்றையும், இன்று சோரம் போய்விட்ட போலி கம்யூனிஸ்டுகளின், பிழைப்புவாத ''தலித்'' தலைவர்களின் துரோகத்தையும் விளக்கிச் சிறப்புரையாற்றப்பட்டது.

★ சீர்காழி வட்டத்தில், வெண்மணித் தியாகிகளை நினைவு கூர்ந்து, ''வர்க்கப் போராட்டத்தை இழிவுபடுத்தும் சாதியப் பிழைப்புவாதிகளைத் தோலுரிப்போம்!'' என்ற தலைப்பில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் துரோகத்தை அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டுப் பரவலாக விநியோகிக்கப்பட்டது.

வெண்மணி கிராமத்தில், சி.பி.எம். கட்சியினர் நடத்திய நினைவுநாள் கூட்டத்தில் வி.வி.மு. தோழர்கள் இப்பிரசுரத்தை கூட்டத்திற்கு வெளியே நின்று பொதுமக்களிடம் விநியோகித்துக் கொண்டிருந்த போது, சி.பி.எம். குண்டர்கள் திரண்டு வந்து தடியால் அடித்து விரட்டினர். இதைக் கண்டு, ஏதோ தகராறு என்று பாய்ந்து வந்த குடிபோதையில் இருந்த போலீசு துணை ஆய்வாளர், தோழர் ரவியைப் பிடித்து அடித்து வண்டியில் ஏற்றி கீவளூர் போலீசு நிலையம் கொண்டு சென்று கொட்டடியில் அடைத்தார். பின்னர் புகார் கொடுக்க வந்த சி.பி.எம். பிரமுகர்கள், பிரசுரத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, ''நீங்க நல்லாத்தான் போட்டிருக்கீங்க; நம்ம பசங்க ஏன் இப்படி அசிங்கமா நடந்துகிட்டாங்க? எதுக்கும் நான் தலைமையைக் கேட்டுச் சொல்றேன்'' என்று நழுவிச் சென்றுவிட்டனர். ''வழக்கு ஏதும் போடாமல், எச்சரித்து விட்டுவிடுங்கள்'' என்று அவர்கள் வெகு நேரம் கழித்து தொலைபேசி மூலம் கூறிய பிறகே, போலீசார் தோழரை விடுவித்தனர்.

★ திருப்பத்தூர், கிருஷ்ணகிரி வட்டங்களில் இயங்கிவரும் ம.க.இ.க., வி.வி.மு. சார்பில் வெண்மணித் தியாகிகளை நினைவு கூர்ந்தும், 'சேரிப்புயல்' திருமாவளவனின் துரோகத்தைத் திரை கிழித்தும், நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளில் அணிதிரளுமாறு மக்களை அறைகூவியும் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் பரவலாக விநியோகிக்கப்பட்டது.

www.padippakam.com

# மக்களுக்காகப் போராடி தியாகியான மாவீரர்

கரூர் நகரில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் செல்வராசு, பொறுக்கி ரவுடி கும்பல் ஒன்றினால் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். பு.மா.இ.மு.வைச் சேர்ந்த மற்றொரு தோழர் பழனிச்சாமி அக்கும்பலின் தாக்குதலில் படுகாயமடைந்தார். இத்தாக்குதல் - படுகொலை தொடர்பாக அக்கும்பலைச் சேர்ந்த ஏழு ரவுடிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கரூர் நகர பு.மா.இ.மு.வைச் சேர்ந்த சில தோழர்கள் அமைப்பின் ஆதரவாளராக இருந்துவரும் சமூக நண்பர் ஒருவரின் குடும்ப பிரச்சினைக் குறித்துப் பேசுவதற்காக, 28.12.2000 அன்று கரூரை ஒட்டியுள்ள கொளந்தானூர் அம்மன் நகர் பகுதிக்குச் சென்றிருந்தனர். தோழர்கள் ஒன்றுகூடி அப்பிரச்சினை குறித்துப் பேசிக் கொண்டிருந்தபொழுது, அப்பகுதியைச் சேர்ந்த சிறுவன் தோழர்களிடம் ஓடிவந்து, பக்கத்தில் இருக்கும் முட்புதர்க் காட்டில் யாரோ ஒரு பெண் உதவி கேட்டு அலறுவதாகக் கூறினான்.

அம்மன் நகருக்கு அருகே அடர்ந்து கிடக்கும் அந்த முட்புதர்க்காடு, சமூக விரோதக் கும்பல்கள் பதுங்குமிடமாக இருந்து வருவதோடு, அங்கு ஏற்கனவே வழிப்பறி, தனியாகச் செல்லும் பெண்களை மானபங்கப் படுத்துதல் போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. இதனால் தோழர்கள் எவ்விதத் தாமதமும் செய்யாமல், அப்பெண்ணை மீட்பதற்காக ஓடினர்.

தோழர்கள் அந்த ரவுடிகளைக் கையும் களவுமாகப் பிடிக்க முயன்றபொழுது, அவர்களில் ஒருவன் தப்பித்து ஓடினான்; தோழர்களைப் பார்த்து ரவுடிகள் திகைத்து நின்ற சமயத்தில், அந்த ரவுடிகளிடம் மாட்டிக் கொண்ட பெண்ணும் தப்பித்தால் போதும் என்ற பயத்தில் ஓடிவிட்டார்.

எஞ்சியிருந்த மூன்று ரவுடிகளை தோழர்கள் விசாரிக்கத் தொடங்கியவுடன், தோழர்களைப் பற்றி அறிந்திருந்த சதீஷ் என்ற ரவுடி "ஒண்ணும் பிரச்சினையில்லை" என்று பூசி மெழுக முயன்றான். அதேசமயம் பன்னி சக்தி என்பவன், தாழ்த்தப்பட்ட தோழர் குமாரைச் சாதியைச் சொல்லி இழிவுபடுத்தி, "சக்கிலியப் பய யார்டா இதை கேக்குறதுக்கு" எனச் சாதித் திமிரோடு, தனது ரவுடித்தனத்தை நியாயப்படுத்தினான். இதனால் தோழர்கள் அந்த ரவுடிகளோடு மோதியோடு, அவர்களை இழுத்து வந்து மக்கள் முன் வைத்து விசாரிக்கவும் முயன்றனர்.

இதனிடையே அந்த ரவுடிக் கும்பலுக்கு ஆதரவாக ஆட்டோ கணேசன், பாலன் உள்ளிட்டு 10 ரவுடிகள் திரண்டு வந்தனர். ஆனாலும், தோழர்கள் அந்த ரவுடிக் கும்பலின் மிரட்டலுக்குச் சிறிதும் பயப்படாமல், அவர்களைப் பகுதி மக்களின் முன் இழுத்து வந்து விசாரிக்கவே முயன்றனர். இச்சமயத்தில் அப்பகுதியைச் சேர்ந்த அண்ணாதுரை என்பவர் ரவுடிகளுக்கு ஆதரவாகப் பேசி தோழர்களைச் சமாதானப் படுத்த முயன்றார். தோழர்கள் சமாதானம் அடையாமல் ரவுடிக் கும்பலின் அட்டூழியங்களை எதிர்த்து நின்று மோதுவதற்கும் தயாரான பொழுது, அந்த ரவுடிக் கும்பல் தோழர் குமாரை, "நீ வெற்றி தியேட்டர் பக்கமா வா, பார்த்துக்கிறேன்" என மிரட்டிக் கொண்டே கலைந்து போனது.

மறுநாள் தோழர்கள் முட்புதர்க் காட்டில் நடந்த சம்பவம் குறித்தும், ரவுடிகளின் மிரட்டல் குறித்தும் போலீசிடம் புகார் செய்தனர். சமூக விரோதிகள் பற்றிக் கொடுக்கப்படும் புகார்கள் மீது போலீசு காட்டும் அக்கறை நாம் அறியாததல்ல. அதே கதிதான் இந்தப் புகாருக்கும் நேர்ந்தது.

அன்றிரவு பாலன், பன்னி சக்திவேல், ஆட்டோ கணேசன், குட்டி ஆகியோர் தலைமையில் 10, 15 ரவுடிகள் அம்மன் நகருக்குள் புகுந்து, தோழர் குமாரைத் தேடி அலைந்தனர். குமாரின் வீட்டுக்குள்ளும் அடாவடித்தனமாக நுழைந்து தேடிய கும்பல், அவர் தங்கள் கைகளில் சிக்காத ஆத்திரத்தில், தோழர் பழனிச்சாமியைப் பிடித்துக் கொண்டது.

ரவுடிக் கும்பல் பழனிச்சாமியை அடித்து முட்புதர்க் காட்டுக்குள் இழுத்துச் செல்ல முயன்றதை, பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர் செல்வராசு, தடுத்து, "எதுவாயிருந்தாலும் இங்கேயே பேசு" என வாக்குவாதம் செய்தார். இதனால் மேலும் ஆத்திரமாகிப் போன அக்கும்பல், தோழர் செல்வராசையும் தாக்கி முட்புதர்க்

**சமூக விரோத ரவுடிக் கும்பலை எதிர்த்துப் போராடி உயர்நீத்த தோழர் செல்வராசு.**



www.padippakam.com



**பத்திரிகைகள் வெளியிட்ட அவதூறு செய்திக்கு மறுப்பு வெளியிடக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம்.**

காட்டுக்குள் இழுத்துச் செல்ல முயன்றது. தோழர்கள் இருவரையும் வேறு தோழர்களோ, பொது மக்களோ கர்ப்பாற்ற முன்வராதபடி கத்திகளையும், உருட்டுக் கட்டைகளையும் காட்டி மிரட்டிக் கொண்டே, அவ்விரு தோழர்களையும் கடத்திச் சென்றனர். அச்சமயத்தில்-அம்மன் நகர் பகுதி மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கிப் போயிருந்தது அக்கும்பலுக்குச் சாதகமாய் அமைந்துவிட்டது.

தோழர் பழனிச்சாமியின் மனைவியும், தோழர்களும் கொடுத்த புகாரின் அடிப்படையில், போலீசாரும், தோழர்களும், முட்புதர்க் காட்டுக்குள் புகுந்து கடத்தப்பட்ட இருவரையும் தேட ஆரம்பித்தவுடன், ரவுடிக் கும்பல் தோழர் பழனிச்சாமியை ரத்தக் காயங்களோடே கூட்டி வந்து போலீசிடம் ஒப்படைத்தனர். ஆனால், தோழர் செல்வராசு, முகம், உதடு போன்றவை கத்தியால் கிழிக்கப் பட்டும், கடுமையாகத் தாக்கப்பட்டதால் மயங்கிய நிலையிலும் முட்புதருக்குள் வீசப்பட்டிருந்தார். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் அவ்ரைத் தோழர்கள் தேடிக் கண்டுபிடித்து, முதலில் கரூர் அரசு மருத்துவமனையிலும், பின்னர் திருச்சி அரசு மருத்துவமனையிலும் சேர்த்தனர். ஆனாலும், அவர் கொடூரமாகத் தாக்கப்பட்டிருந்ததால், சிகிச்சைப் பலன் அளிக்காமல் 30.12.2000 காலை மரணமடைந்தார்.

இந்த ரவுடிக் கும்பலுக்கு ஆதரவாக அ.தி.மு.க. நகரச்செயலாளர் நெடுஞ்செழியன் தனது அடியாள் கூட்டத்தோடு போலீசு நிலையத்திற்கு வந்து, போலீசாரின் கண் முன்னாலேயே, ''சமாதானமாகப் போயிடு; இல்லைன்னா பிரச்சினை இன்னும் கடுமையாகப் போகும்'' எனத் தோழர்களை மிரட்டிப் பார்த்தான். ''போராட்டத்தில் ஒருவரை இழந்த பிறகு, சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று அடித்துக் கூறிவிட்ட தோழர்களிடம் அவனின் மிரட்டல் பலிக்கவில்லை.

ரவுடித்தனத்தை எதிர்த்த போரரட்டத்தில் தோழர். செல்வராசு இறந்து போனதையும், தோழர் பழனிச்சாமி தாக்கப்பட்டதையும் பத்திரிகைகள் நன்கொடை வசூலிப்பதில் ஏற்பட்ட தகராறாகத் திரித்துச் செய்திகளை வெளியிட்டிருந்தன. ''இந்த அவதூறு தோழர் செல்வராசின் தியாகத்தை இழிவுபடுத்துவதாகும்; போலீசார் இதற்கு உடனே மறுப்பு வெளியிட வேண்டும்'' எனக் கோரி, தோழரின் உடலை வாங்க மறுத்து ம.க.இ.க. - பு.மா.இ.மு. தோழர்கள் திருச்சி அரசு மருத்துவ மனையின் முன் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தின் பின்தான் போலீசு அதிகாரிகள் ஓடிவந்து, மறுப்புச் செய்தி வெளியிட ஒப்புக் கொண்டனர்.

30.12.2000 அன்று இரவு தோழர் செல்வராசின் உடல் எவ்வித மத - சாதி சடங்குகளும் இன்றி, கம்யூனிச முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது. அதன்பின் தோழரின் மறைவு குறித்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டதோடு, தோழரின் தியாகத் திற்கு அஞ்சலி செலுத்தி நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. படுகாயமடைந்த தோழர் பழனிச்சாமி தற்பொழுது மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப் பட்டு, உடல்நலம் தேறி வருகிறார்.

★★★

**தோ**ழர் செல்வராசின் மறைவு அவரது குடும்பத்துக்கும், அவருடன் நெருங்கிப் பழகிய தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரைப் பற்றி அறியாத, நெருங்கிப் பழகியிராத் தோழர்களுக்கும் கூட, ஏன், புரட்சிகர அரசியலையே அறியாத பொது மக்களில் ஒருவர்கூட, இந்தச் செய்தியைப் படிக்கும் பொழுது, உயிரைத் துச்சமாக மதித்து ரவுடிகளை எதிர்த்து மடிந்து போன இந்தத் தோழரின் மீது மிகுந்த மதிப்பு கொள்வார். அவரின் அரசியல் செயல்பாடுகள் குறித்தும், அவர் தனது வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்து வந்த பண்புகள் பற்றியும் நாம் அறிந்து கொள்ளும்பொழுது, அவரின் மரணம் குறித்து நமக்கு ஏற்படும் அனுதாபமும், அவர் மீதான நமது மதிப்பும் இரட்டிப்பாகலாம்.

தோழர் செல்வராசு நடுத்தர குடும்பத்தில் பிறந்திருந்தாலும், நடுத்தர வர்க்கத்துக்கே உரிய போலி கௌரவம் பார்க்கும் பண்பு இல்லாதவர். தனக்கு நிரந்தர வேலை கிடைக்கவில்லையென்ற பொழுதும், ''வெள்ளைக் காலர்'' வேலைக்குதான் போவேன் என வீம்பாக உட்கார்ந்து கொண்டு வெட்டி ஆபீசராகப் பொழுதைக் கழிக்காமல், கிடைக்கும் கூலி வேலைக்குச் சென்று வந்ததில் இதனைக் காணலாம். நேர்மையாக உழைத்து வாழ வேண்டும் என விரும்பிய அவர், தனது அண்ணன் வட்டித் தொழில் நடத்தி வந்ததைச் சமரசமின்றி எதிர்த்துப் போராடினார். தன்னால் இயன்ற உதவிகளை, கடன் வாங்கிச் செய்யுமளவு இளகிய, இரக்கக் குணமும் நிறைந்தவர், அவர்.

கடந்த நான்காண்டுகளாக பு.மா.இ.மு.வில் செயல்பட்டு வந்த அவர், குறுகிய காலத்திலேயே தனியாகவே பேருந்துகளில் அரசியல் பிரச்சாரம் செய்வதிலும், இன்னபிற அமைப்புப் பணிகளைச் செய்வதிலும் தேர்ச்சி பெற்றார். ''நான் சாதி மறுப்புத் திருமணம்தான் செய்து கொள்வேன்'' எனத் தனது பெற்றோருடன் போராடியதோடு மட்டுமின்றி, தனது தங்கைக்கு இந்துமதச் சம்பிரதாயங்களின் படி சடங்கு நடத்துவதையும் எதிர்த்துப் போராடினார். இப்போராட்டங்கள், தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் புரட்சிகர அரசியலுக்கு ஆதரவாளராக மாற்றிவிட வேண்டும் என்ற அக்கறையின் வெளிப்பாடுகள்தான்.

சமூகக் கொடுமைகளை, அநீதிகளை எதிர்த்த போராட்டங்களில் அவர் எவ்விதச் சமரசமும் காட்டியதில்லை. உதாரணத்திற்குச் சொன்னால், சேலம் நகரத்தில் தரைக்கடை வியாபாரிகள் நடத்திய போராட்டத்தின் பொழுது, திமிராக நடந்து கொண்ட ஒரு போலீசு ஆய்வாளரைச் சட்டையைக் கோர்த்துப் பிடித்துத் தூக்கித் தாக்கினார்.

திரைப்படங்களில் கதாநாயகன் தவறு செய்யும் போலீசு அதிகாரிகளைப் புரட்டி புரட்டி அடிப்பாரே, அதுபோன்ற ஹீரோத் தனமா இது? இல்லை, அரசியல்வாதிகளும், முதலாளிகளும், சமூக விரோதிகளும் தங்களுக்கு இருக்கும் அதிகார பலத்தைப் பயன்படுத்தி, ஐ.பி.எஸ். அதிகாரிகளைக் கூட ஃபோனில் பேசியே மிரட்டிப் பணிய வைக்கிறார்களே, அதுபோன்ற வெற்றுத் துணிச்சலா?

நிச்சயமாக இல்லை. தோழரின் இந்தத் துணிவு, பாட்டாளி வர்க்க அரசியல் உணர்வில் இருந்தும், வர்க்கக் கோபத்தில் இருந்தும் பீறிட்டுக் கிளம்புகிறது. மக்களின் எதிரிகளோடு சமரசின்றிப் போராட வேண்டும் என்ற போர்க் குணத்தின் அடையாளம் இது. தோழரைப் பலி கொண்டு விட்ட இந்த சம்பவத்தில் கூட, ''எதுவானாலும் சரி, தோழர் பழனிச்சாமியை ரவுடிகளிடமிருந்து காப்பாற்றியாக வேண்டும்'' என்று தோழர் செல்வராசிடம் ஏற்பட்ட உணர்வு போர்க் குணத்துடன் வெளிப்பட்டிருக்கிறது.

நடந்த சம்பவத்தைப் பரிசீலித்துப் பாருங்கள். தோழரின் தியாகத்தில் இருந்து நாம் பெற வேண்டிய குறிப்பான படிப்பினை என்ன என்பது தெளிவாகப் புரியும்.

தோழர். பழனிச்சாமியை ரவுடிக் கும்பல்

www.padippakam.com

அடித்துக் கடத்திச் சென்றதைப் பகுதியைச் சேர்ந்த பல ஆண்களும் பார்த்து கொண்டு தான் நின்றிருக்கிறார்கள். சம்பவம் நடந்தபொழுது தோழர் செல்வராசு மட்டுமின்றி வேறு சில தோழர்களும் இருந்திருக்கிறார்கள். பகுதிப் பெண்கள் ரவுடிக் கும்பலை எதிர்த்துச் சத்தம் போட்டிருக்கிறார்கள். ''தோழர் பழனிச்சாமியைக் காப்பாற்ற வேண்டும்; இந்த அராஜகத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்'' என்ற உணர்வு கூடி நின்ற ஒவ்வொருவரின் மனதிலும் எழுந்தாலும், தோழர் செல்வராசு மட்டும்தான் ரவுடிக் கும்பலைத் துணிவோடு தடுத்திருக்கிறார்.

ரவுடிகளின் எண்ணிக்கையை விட, பகுதி மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த பொழுதும், அவர்களால் ரவுடிகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதற்கு என்ன காரணம்? ''ரவுடிகள் கத்தி, உருட்டுக் கட்டை போன்ற ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள்; அவர்களோடு மோதினால் எது வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்று நமக்குள் ஏற்பட்டுவிட்ட தயக்கம், ரவுடிகளுக்கு இன்னொரு சாதகமாய் அமைந்து விட்டது.

போராட்டத்தின் வெற்றியை ஆயுதமா தீர்மானிக்கிறது? மக்களின் உணர்வுதான் போராட்டத்தின் வெற்றி / தோல்வியைத் தீர்மானிக்கக்கூடிய அடிப்படையான காரணி என்று தானே மார்க்சிய ஆசான்கள் போதித்திருக்கிறார்கள். புரட்சிகர அரசியலில் ஈடுபாடு கொண்டார்கள், தோழர். செல்வராசைப் போன்று தயக்கத்தை உடைத்தெறியாவிட்டால், மக்களிடம் புரையோடிப் போயிருக்கும் தயக்கத்தைப் போக்க முடியாது; மக்களை அணிதிரட்டி தலைமையேற்கவும் முடியாது.

''மக்கள் பிரச்சினைகளில் போர்க் குணத்துடன் தலையிடுவது'' என்ற பொதுவுடைமைப் பண்பைக் கடைப்பிடிப்பதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்திருக்கிறார், தோழர். செல்வராசு. புரட்சிகர அரசியலில் ஈடுபாடு கொண்டவர்கள் அவரின் நினைவாக, அவரிடமிருந்து வரித்துக் கொள்ள வேண்டிய இன்றியமையாத பண்பும் இதுதான். தோழரின் தியாகத்தை முன்னிறுத்தி, வர்க்க எதிரிகள், சமூக விரோத ரவுடிக் கும்பல்களுக்கு எதிராக மக்களின் புரட்சிகர உணர்வைத் தட்டியெழுப்பப் போராடுவதும், அந்தப் போராட்டத்தில் எத்தகைய இழப்புகளையும் சந்திக்க தயாராக இருக்க உறுதிபூணுவதும் தான் தோழரின் மறைவுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி.

தியாக தோழர் செல்வராசின் நினைவு நீடூழி வாழ்க!

• சுப்பு

**- தகவல் மற்றும் படங்கள்:**
**பு.மா.இ.மு.,**
**கரூர்.**

# “தொழிலாளர்கள் தேசங்கடந்தவர்களாக கட்டாயம் மாற வேண்டும்!”

## - அனைத்துலக தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவரான அன்டோனியோ நேடோ வலியுறுத்தும் கடமை

**அன்டோனியோ நேடோ - பிரேசில் நாட்டின சி.ஜி.டி.பி. எனும் தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரபலமான முன்னணித் தலைவர் ஆவார். இவர் அனைத்துலக தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவராகவும் உள்ளார். ஏகாதிபத்திய வல்லரசுகள் மேலாதிக்கத் தாக்குதலை நடத்திவரும் இன்றைய கட்டத்தில், அனைத்துலகத் தொழிலாளர் இயக்கம் உலகமயமாக்கலுக்கு எதிராக உழைக்கும் மக்களுடன் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தைத் தனது பேட்டியில் அவர் வலியுறுத்துகிறார். துறை சார்ந்த போராட்டங்கள், அரசியலற்ற தொழிற்சங்கவாத போராட்டங்கள் என செக்குமாட்டுப் பாதையில் சென்று தேக்கமடைந்து விட்ட இந்தியத் தொழிலாளி வர்க்கத்துக்கு விரிந்த பார்வையைத் தருவதாக அவரது பேட்டி அமைந்துள்ளது. ''ஃபிராண்டியர்'' (நவம் 19 - டிசம் 2) இதழில் வெளியான அவரது பேட்டியின் சுருக்கப்பட்ட மொழியாக்கம், இது.**

♦ *தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் இன்றைய நிலைமை குறித்து உங்கள் கருத்து என்ன?*

● பெருகிவரும் வேலையின்மை, அரை குறையான வேலைவாய்ப்பு, வறுமை ஆகியன உலகெங்கும் தீவிரமாகி வருகின்றன. 500-க்கும் குறைவான கோடீசுவரர்கள் ஒரு புறம், 130 கோடிக்கும் மேலான மக்கள் வறுமையில் தத்தளிப்பது மறுபுறம் என உலகம் பிளவுபட்டு நிற்கிறது.

1985-லிருந்து 1995 வரையிலான பத்தாண்டுகளில் ஆப்பிரிக்காவில் மட்டும் ஒரு கோடிக்கும் மேலான தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கிறார்கள். ஜப்பானில் வேலையின்மை 30 இலட்சத்தைத் தாண்டி விட்டது. எமது நாடான பிரேசிலில் மொத்த மக்கட் தொகையில் 20% பேர் வேலையின்றி உள்ளனர். உலக வங்கி, ஐ.எம்.எப்-பின் தூண்டுதலோடும் ஆதரவோடும் கிளம்பியுள்ள தேசங்கடந்த தொழிற்கழகங்களும் பங்குச் சந்தை சூதாட்டத்தில் குவியும் ஏகாதிபத்திய நிதிமூலதனமும் தொழிற் சங்க சட்டங்களையும் தொழிலாளர் நீதியையும் இடித்துத் தரைமட்டமாக்கி வருகின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமை அச்சுறுத்தப்பட்டு வருகிறது.

♦ *உலக வர்த்தக கழகம் (WTO) பற்றியும், உலகமயம்-சுதந்திர வர்த்தகம் என்ற சித்தாந்தத்தைப் பரப்பி வருவதில் அதன் பங்கு பற்றியும் உங்கள் கருத்து என்ன?*

● உலக வர்த்தக கழகம் என்பது 'வாஷிங்டன் பொதுக் கருத்து' அடிப்படையிலான விரிவாக்கப்பட்ட பொருளாதார ஆதிக்கத்திற்கான ஒரு கருவியாகும்.

உலகமய ஆதிக்க சக்திகளுக்குச் சாதகமான இத்திட்டத்தால், ஏழை நாடுகளின் பொருளாதாரம் நாசமாக்கப்படுவதும், அந்நாடுகளின் அரசுகளைப் பலவீனப்படுத்தி, சுதந்திர வர்த்தகத்தின் பெயரால் அந்நாடுகளின் சுயாதிபத்திய உரிமை பறிக்கப்படுவதும்தான் நடக்கிறது. ஏழை நாடுகளின் உள்நாட்டுச் சந்தைகள் ஏகபோக நிறுவனங்களாலும், நிதிமூலதனத்தாலும் கட்டுப்படுத்தப்படுவதுதான் நடந்து வருகிறது. உலகமயம் சுதந்திரமான சந்தையை உருவாக்கவில்லை. அது ஏகபோக கும்பல்களுக்கான பாதுகாக்கப்பட்ட வரம்புக்குட்பட்ட சந்தையைத்தான் தோற்றுவித்துள்ளது.

ஒரு தரப்பின் பொருளாதாரத்துக்கு உ.வ.க. சாதகமாகவும், தனது உத்தரவுப்படி பொருளாதாரத்தை மாற்றியமைக்காத மற்றொரு தரப்பின் மீது உ.வ.க. தண்டனை விதிப்பதும் எந்த வகையில் நியாயமாகும்? யார் எதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று உ.வ.க. தீர்மானிப்பதும், மற்றவர்கள் அதை உற்பத்தி செய்யக்கூடாது என்று தடுப்பதும் எவ்வாறு நியாயமாகும்? சுதந்திர வர்த்தகம் பற்றி உபதேசிக்கும் அமெரிக்கா, பிற நாடுகளின் பொருட்களை அமெரிக்காவில் விற்பதற்கு வர்த்தகத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பது எப்படி நியாயமாகும்?

♦ *பிரேசில் நாட்டில் உலகமயமாக்கலின் விளைவு என்ன?*

● உலகமயமாக்கலால் ஏற்பட்ட பேரழிவை எங்கள் கண் முன்னே பார்க்கிறோம். பிரேசில், வற்றாத இயற்கை வளங்களையும் மனித வளத்தையும் கொண்ட நாடு. இருப்பினும் பெரும்பான்மையான எமது மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம்,

ஜப்பான் ஆகிய மேலாதிக்க வல்லரசுகளின் ஏகபோக நிதிமூலதனம் எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறது. பூதாகரமான அந்நியக் கடனும் அதற்கான அநியாய வட்டியும்தான் எமது பொருளாதாரத்தைச் சீரழிக்கும் மிகப் பெரிய பிரச்சினை. பிரேசில் நாட்டின் கடன் 11650 கோடி டாலராகவும் (ஏறத்தாழ 5,24,250 கோடி ரூபாய்) நாட்டின் மொத்த வருவாயில் 33% ஆகவும் உள்ளது. இக்கடனுக்குச் செலுத்தப்படும் வட்டியின் காரணமாக, உள்நாட்டில் மறு உற்பத்திக்கான முதலீட்டுக்கு நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டு அடுத்தடுத்து தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. வேலையின்மையும் வறுமையும் தீவிரமாகி வருகிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட அரசாங்கம் மீண்டும் கடன் வாங்கி புதைசேற்றில் சிக்கிக் கொண்டுள்ளது. இந்த விஷச் சூழலிலிருந்து பிரேசில் மீள முடியவில்லை. இதனால் இன்று ஏறத்தாழ ஒரு கோடிப் பேர் வேலையிழந்துள்ளனர். பல பத்து லட்சம் பேர் அரைகுறை வேலைவாய்ப்புகளுடன் பரிதவிக்கின்றனர். சட்டபூர்வ குறைந்தபட்சக் கூலியைக் கொண்டு எந்தவொரு தொழிலாளியும் அடிப்படைத் தேவைகளை ஈடேற்றிக் கொள்ள முடியாமல் உண்மை ஊதியம் வீழ்ச்சியடைந்துள்ளது. பிரேசிலில் ஏறத்தாழ 52% தொழிலாளர்கள் குறைந்தபட்சக் கூலியை மட்டுமே பெற்று உயிர் வாழவே போராடுகின்றனர். 4 கோடிப் பேர் படிப்பறிவின்றியும் பலபத்து லட்சம் பேர் வீடிழந்தும் பரிதவிக்கின்றனர்.







**ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயமாக்கலை எதிர்த்து உலகெங்கும் நடந்து வரும் போராட்டங்களின் ஒரு பகுதி.**

♦ *இந்தத் தாக்குதலை பிரேசிலில் உள்ள தொழிற்சங்கங்கள் எவ்வாறு எதிர்த்துப் போராடுகின்றன?*

● பிரேசில் தொழிற்சங்க இயக்கம் நாடு தழுவிய அளவில் பல்வேறு போராட்டங்களை நடத்திய நீண்ட வரலாறு கொண்ட இயக்கமாகும். ஏகாதிபத்திய நிறுவனங்களையும், தேசங்கடந்த தொழிற்கழகங்களையும் எதிர்ப்பது, தனியார் மய எதிர்ப்பு, ஆலை மூடல் - ஆட்குறைப்புக்கு எதிர்ப்பு என பல்வேறு பிரச்சினைகளுக்காகவும் நாட்டின் சுயாதிபத்திய உரிமைக்காகவும் இலட்சக் கணக்கான மக்களைத் திரட்டி வீதிகளில் வீரப்போர் நடத்தியுள்ளது. பிரேசிலின் இராணுவ சர்வாதிகார கும்பலுக்கு எதிரான போர்க் குணமிக்க மக்கள் திரள் போராட்டங்களின் ஊடாக நான் தொழிற்சங்க இயக்கத்தில் வளர்ந்தேன். அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மக்கள் திரள் அமைப்புகளின் ஒன்றுபட்ட போராட்டங்களின் விளைவாக இராணுவ சர்வாதிகாரம் தூக்கியெறியப்பட்டது. அதன் பின்னரும் தொடர்ந்து போராடி வருகிறோம். 1990-களில் தனியார்மய - தாராளமய புதிய பொருளாதாரக் கொள்கையைத் திணித்த அதிபர் பெர்னாண்டோ காலர் டிமெல்லா-வை பதவியை விட்டு விரட்டியடித்தோம். அதன்பிறகு ஆட்சிக்கு வந்த அதிபர் கார்டோசா, தேசங்கடந்த தொழிற் கழகங்களின் பகற்கொள்ளைக்காக அரசியல் சட்டத்தையே திருத்தியமைக்க முயற்சித்தபோது, அதை எதிர்த்துப் போராடி முறியடித்தோம். இதன் விளைவாக பிரேசிலில் தொலைபேசி, பெட்ரோலியம், போக்குவரத்து, இரயில்வே, வங்கி - காப்பீடுத் துறை முதலியன இன்னமும் அரசுத் துறைகளாகவே தொடர்ந்து நீடிக்கின்றன. தொழிற்சங்க கூட்டமைப்புகளின் முன்முயற்சியால் உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து நாட்டின் சுயாதிபத்திய உரிமையைப் பாதுகாக்க மிக விரிவான தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியிருப்பது, இன்று யதார்த்தமாகியுள்ளது. மக்கள் மீண்டும் வீதிகளில் திரண்டு போராடுகிறார்கள். அப்போராட்டங்களில் நாங்கள் எப்போதும் முன்னணியில் நிற்கிறோம்.

♦ *அனைத்துலக தொழிற்சங்க கூட்டமைப்பின் பங்கு குறித்து இன்று நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?*

● என்றுமில்லாத அளவுக்கு இன்று அனைத்துலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை மிக அவசியமாகியுள்ளது. உலகமயமாக்கலுக்கும், பங்குச்சந்தையில் சூதாடக் குவியும் ஏகாதிபத்திய நிதிமூலதனத்துக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளர்கள் ஓரணியில் திரள வேண்டியது மிக அவசியமாகும். வேலை வாய்ப்பு, நாட்டின் சுயாதிபத்திய உரிமை, மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதும் ஏகாதிபத்தியத் தாக்குதலை முறியடிப்பதுமே இன்று அனைத்துலகத் தொழிலாளர்களின் முக்கிய கடமையாகும்.

தேசங்கடந்த தொழிலாளர் இயக்கத்தைக் கட்டியமைக்க நாம் செயலாற்றுவதே நமது முக்கிய பணியாகும். தொழிற்சங்கம் மட்டுமின்றி, தொழிலாளர்களும் இன்று தேசங்கடந்தவர்களாக மாறுவதும் மிக அவசிய மாகும். ●

## அறிவிப்பு

**"முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்." எனும் தொடர்கட்டுரையின் நான்காம் பகுதி தவிர்க்க இயலாத காரணத்தினால், இந்த இதழில் இடம் பெறவில்லை. அக்கட்டுரை அடுத்த இதழில் இருந்து தொடர்ந்து வெளிவரும் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் குழு.**

# அஞ்சல்துறை வேலை நிறுத்தம் அரசாங்க கொத்தடிமைகளின் போராட்டம்

அஞ்சல்துறைத் தொழிலாளர்களின் 13 நாள் போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்து விட்டார் மைய தகவல் - தொடர்புத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான். ஆளும் வர்க்கங்களும் ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க கும்பலும் வீசிய அமைச்சர் பதவி" என்னும் ரொட்டித் துண்டைக் கவ்விக்கொண்டு அவர்கள் இட்ட கட்டளையை விசுவாசமாகவும் வெற்றிகரமாகவும் செய்து முடித்து விட்டார்.

ஆறு இலட்சம் நிரந்தர ஊழியர்களும், துறைசாரா முகவர்கள் என்கிற பெயரில் அரசுக் கொத்தடிமைகளாய்ப் பாடுபடும் மூன்று இலட்சம் தற்காலிகத் தொழிலாளர்களும் கொண்டது இந்திய அஞ்சல்துறை. இரயில்வே துறைக்கு அடுத்துப் பெரிய அரசுத் துறை. உலகிலுள்ள மிகப்பெரிய அஞ்சல்வலைப் பின்னல்களில் ஒன்று.

தொழில்-வணிக நிறுவனங்களும் மேட்டுக்குடியினரும் தமது அஞ்சல் தேவைகளுக்குத் தனியார் '''கூரியர்'' சேவைக்கு மாறிவிட்ட நிலையில், அரசு அஞ்சல் துறைதான் ஏழை, நடுத்தர மக்களின் அஞ்சல் சேவைக்கான ஆதாரமாக இருக்கிறது. மக்கள் சேவை என்பதே வேண்டாத, தேவையற்ற, வீண் விரயம் எனக் கருதி, அவற்றை ஒழித்துக் கட்டும் வேலையை இந்திரா காந்தி அரசே துவங்கி விட்டது. குறிப்பாக, அஞ்சல் துறையில் அஞ்சல் பிரிப்பகப் பிரிவை வெட்டிச் சுருக்கும் வேலையைத் துவங்கியது. மக்கள் சேவைகளை ஒழித்துக்கட்டும் வேலையை நிறைவு செய்வதை வாஜ்பாய் அரசு மேற்கொண்டுள்ளது. இந்திராவுக்கு ஒரு ஜெகஜீவன் ராம் அமைந்ததைப்போல, வாஜ்பாயிக்கு ராம்விலாஸ் பஸ்வான் கிடைத்துவிட்டார். இரண்டு பேருமே தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு, பார்ப்பன-பனியா கூட்டத்துக்குச் சேவை செய்வதில் விசுவாசிகளாகி விட்டவர்கள்.

ராம்விலாஸ் பஸ்வான் பிசுபிசுக்கச் செய்த அஞ்சல் துறைத் தொழிலாளர் போராட்டத்தின் முக்கியக் கோரிக்கைகளில் ஒன்று, துறைசாரா முகவர்கள் என்று அழைக்கப்படும் தற்காலிகத் தொழிலாளர்களை (நிரந்தமாக்கும்) நிரந்தரத் தொழிலாளர்களாகப் பாவிக்கும் வகையில், அஞ்சல் துறை ஊழியர்களாக அறிவிக்கக் கோருவது. அப்படிச் செய்வதினால், பயனடையப் போவது பெரும் எண்ணிக்கையில் துறைசாரா முகவர்களாகப் பணியாற்றி வரும் தாழ்த்தப்பட்ட சாதியினர்தான். ஆனால், தலித்சேனாவின் தலைவராகவும் உள்ள ராம்விலாஸ் பஸ்வான் இந்தக்கோரிக்கையை நிராகரித்து, தாழ்த்தப்பட்ட ஊழியர்களுக்குத் துரோகமிழைப்பதில்தான் அதிக அக்கறை காட்டினார்,

பழைய கதையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு பார்த்தாலும், அஞ்சல் துறை ஊழியர்களின் தற்போதைய கோரிக்கைகளுக்கு ஒரு பத்தாண்டு வரலாறு இருக்கிறது. அஞ்சல்துறைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் துறைசாரா முகவர்களின் நிரந்திரமாக்கல் ஆகிய கோரிக்கைகளை 1990-லேயே முன்வைத்தனர். 1993-இல் சரண்ஜித் சில் தல்வார் கமிட்டி அமைக்கப்பட்டது. அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்த அந்தக் கமிட்டி அஞ்சல் துறைத் தொழிலாளர் கோரிக்கைகள் நியாயமானவைதாம் என்று பரிந்துரை செய்தது.

குறிப்பாக, ''துறைசாரா முகவர்களைக் கிராமப்புற அஞ்சல் ஊழியர்கள் என்று அங்கீகரிக்க வேண்டும்; ஆண்டு ஊதிய உயர்வுடன் கூடிய ஊதிய அளவு நிர்ணயிக்கப்பட் வேண்டும்; ஆண்டுக்கு 15 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறையும் குறைந்தது 610 ரூபாய் மாத ஓய்வூதியமும் தர வேண்டும்; நிரந்தர அரசாங்க ஊழியருக்குள்ளதைப்போல கிராஜுடி பலன்கள் தரப்படவேண்டும் என்று தல்வார் கமிட்டி பரிந்துரை செய்தது.

அப்போதிருந்த காங்கிரசின் நரசிம்ம ராவ் அரசு, அதன்பிறகு வந்த ஐக்கிய முன்னணி அரசுகள், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுகள் என்று எதுவும் தல்வார் கமிட்டி அறிக்கையைக் கண்டுகொள்ளவே இல்லை. போலி கம்யூனிஸ்டுகள் உட்பட ஓட்டுப்பொறுக்கிகள் எவருமே அஞ்சல் துறை தொழிலாளர்களின் நலனில் அக்கறைப்படவில்லை; தல்வார் கமிட்டி பரிந்துரைகளைக் கிடப்பில் போட்டுவிட்டன.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 1998 ஜூலையில் அஞ்சல்துறை ஊழியர்கள் எட்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடத்தினர். அப்போதைய தகவல்-தொடர்புத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அளித்த வாக்குறுதிப்படி அரசு ஊழியர் துறை அதிகாரி தத்தா தலைமையில், மூன்று அஞ்சல்துறை அதிகாரிகள் மற்றும் இரண்டு தொழிற்சங்கக் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. குழு உறுப்பினர்கள் ஒன்றுபடும் கருத்துக்களைத் தொகுக்கும்படி கோரப்பட்டது. குழு உறுப்பினர்களின் ஒரு மனதான பரிந்துரைகள் அஞ்சல் துறைத் தொழிலாளர்களுக்கு சாதகமாகவே இருந்தன. 1999 மே மாதம் அப்பரிந்துரைகள் நிதி அமைச்சகத்துக்கு முன்மொழியப்பட்டு, நிராகரிக்கப்பட்டன.

அந்த மாதமே வேலைநிறுத்தம் செய்வதற்காக அஞ்சல்துறைத் தொழிலாளர்கள் திட்டமிட்டிருந்தனர். தொழிலாளர்களின் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலிப்பதாக ராம்விலாஸ் பஸ்வானும் அவரது துணை அமைச்சரும் கொடுத்த வாக்குறுதியை ஏற்று, அப்போதைய வேலைநிறுத்த முயற்சியைக் கைவிட்டனர். ஆனால் மந்திரியோ, பீகார் தேர்தல் வேலை, ஜனதா தளத்தை உடைத்துத் தனிக்கட்சி வைப்பது, தொலைபேசித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஒடுக்குவது, அந்நியக் கம்பெனிகளிடம் பேரம் பேசி அத்துறையைத் தாரைவார்ப்

**அஞ்சல்துறைத் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தில்லியில் நாடாளுமன்றத்தை நோக்கி நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி.**



www.padippakam.com

பது ஆகிய "பணிகளில்" மூழ்கிப்போனார்.

ஒப்புக்கொண்டபடி, தொழிலாளர் கோரிக்கைகள் மீது முடிவு எடுப்பதற்கு பதில் மேலும் இழுத்தடிக்கும் தந்திரங்களில், ராம்விலாஸ் பஸ்வான் ஈடுபட்டார். தொழிலாளர் கோரிக்கைகளைப் பரிசீலிப்ப தற்கு மைய அமைச்சர்கள் குழு ஒன்றை நிய மித்தார். அக்குழு மைய உள்துறை மந்தி ரியும் இந்து பாசிஸ்டுமான அத்வானி தலை மையில் வாஜ்பாயின் வலதுகரமான வெளி விவகார மந்திரி ஜஸ்வந்த் சிங், அமெரிக்கக் கைக்கூலியான நிதி மந்திரி எஸ்வந்த் சின்கா, மத்திய அரசு ஊழியர் மற்றும் பயிற்சி மந்திரி மற்றும் தகவல்-தொடர்பு மந்திரிகளை உறுப்பினராகக் கொண்டது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைக் கப்பட்டதல்ல இக்குழு என்பதை அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களைப் பார்த்தாலே புரியும். ராமனுக்கு அனுமா னைப் போல, அத்வானி-வாஜ்பாயிக்கு ஊழியஞ் செய்யவே அவதாரம் எடுத்திருப் பதை விசுவாசத்தோடு மீண்டும் மீண்டும் தண்டனிட்டுக் காட்டுகிறார், தலித்சேனைத் தலைவர் ராம்விலாஸ் பாஸ்வான்.

இது வெறும் இழுத்தடிப்பு உத்திதான் என்பதைப் புரிந்து கொண்ட தொழிலாளர் கூட்டமைப்புகள் டிசம்பர் 5ந் தேதி வேலை நிறுத்தத்தில் குதித்தன. நாடு முழுவதும் ஒன்றரை இல்ட்சம் அஞ்சலகங்களில் முழு வேலை நிறுத்தம் துவங்கியது. சங்கத்தலை மையோ, அரசோ எதிர்பாராதவாறு வெற்றி கரமாக நடந்தது. அமைச்சரோ கண்டுகொள் ளாமல் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டார். ஒரு பத்தாம்பசலி போட்ட பொது நல வழக்கை ஏற்ற தில்லி உயர்நீதி மன்றம் அத்தியாவ சியச் சேவைகள் பாதுகாப்புச் சட்டம் என்ற கருப்புச்சட்டத்தை ஏவியாவது வேலை நிறுத்தத்தை ஒடுக்கும்படி உத்திரவிட்டது.

வேலைநிறுத்தம் செய்வதென்று அக். -18லேயே முடிவெடுக்கப்பட்டு, 1947 தொழில் தகராறு சட்டப்படி அரசுக்கு முறை யான தாக்கீது செய்திருந்தும் டிச 5ந் தேதி துவங்கிய வேலை நிறுத்தம் சட்ட விரோத மானது என்று ராம்விலாஸ் பஸ்வான் முன்மொழிய அரசு அறிவித்தது. இருந்த போதும் அஞ்சாது தொழிலாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அடுத்த டுத்து சில மாநில அரசுகள் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தைப் பிரகட னப்படுத்திப் போராட்டத்தை ஒடுக்குவதில் இறங்கின.

டிசம்பர் 17 இரவில் ராம்விலாஸ் பஸ்வானுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்ட பா.ஜ.க மற்றும் காங்கிரசு தொழி லாளர் கூட்டமைப்புகள் வேலைநிறுத் தத்தை விலக்கிக் கொண்டன. தாழ்த்தப்பட்ட தொழிலாளர் அமைப்பு ஏற்கனவே வேலை நிறுத்தத்தில் இருந்து விலகி நின்றிருந்தது. இறுதியில், இடதுசாரிகளின் தலைமையி லான கூட்டமைப்பு, 'பொது மக்கள் நலனை மனதில் வைத்து வேலைக்குத் திரும்புவது' என்று முடிவு செய்தது.



''தலித்'' தலைவர் எனச் சொல்லிக் கொண்டு, இந்து மதவெறியர்களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பாதசேவை செய்து வரும் ராம்விலாஸ் பஸ்வானின் புதிய கட்சி (ஜனசக்தி) துவக்க விழா.

துறைசாரா முக்வர்கள் என்றழைக்கப் பட்ட தற்காலிகத் தொழிலாளர்கள் இனி கிரா மப்புற அஞ்சல் பிரதிநிதிகள் என்று அழைக்கப்பட்டு தற்காலிகத் தொழிலாளர் களாகவே நீடிப்பர். பதவி உயர்வு பெறும் ஊழியர்களின் சம்பள விகிதத்தை அமைச் சர்களின் குழுவும், பிற கோரிக்கைகளை அஞ்சல்துறையும் பரிசீலிக்கும் என்பதுதான் பஸ்வானுடன் தொழிலாளர் கூட்டமைப் புகள் போட்டுக்கொண்ட ஒப்பந்தம். 13 நாட்கள் போராட்டத்தின் இறுதியில் தொழி லாளர்கள் பெற்றதெல்லாம் மீண்டும் வாக்கு றுதிகள் தாம். தொழிலாளர்களின் கோரிக் கைகள் அனைத்தும் நியாயமானவை என்ற போதிலும், அவர்களின் போராட்டத்துக்கு எதிராகச் செய்தி ஊடகங்கள் தீவிரப் பிரச் சாரம் செய்தன. தனியார் கூரியர் நிறுவ னங்கள் பெரும் இலாபத்தை அள்ளிக் கொண்டன.

ஏற்கனவே கூறியவாறு, அஞ்சல்துறை தொழிலாளர்கள் கோரிக்கைகளை கொஞ்சமும் ஏற்க மறுத்து, புறக்கணித்து ஒடுக்குவதற்கு மற்றொரு முக்கியமான காரணம், அரசு தற்போது கடைப்பிடித்து வரும் புதிய பொரு ளாதாரக் கொள்கையாகும். அனைத்துத் தொழில் - வணிக - சேவைத் துறைகளிலும் புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்ப டுவதால் தொழிலாளர்களும் பிற உழைக் கும் மக்களும்தான் கூடுதலாகப் பாதிக்கப் படுகிறார்கள். இதை எதிர்த்து போராடாமல் எடுக்கப்படும் தனிப்பட்ட துறைசார் போராட்டங்கள் இப்படித்தான் முறியடிக்கப் படுகின்றன. தற்போதைய அஞ்சல்துறைத் தொழிலாளர் போராட்டமும், துறைசார் கோரிக்கைகளை மட்டுமே முன் வைத்து, பிற பிரிவு மக்கள் ஆதரவு திரட்டப்படாமல் பழைய பாணியிலேயே நடத்தப்பட்டது. இத னால் போராட்டத்துக்கு எதிராகப் பொதுமக் கள் கருத்தை உருவாக்குவது அரசுக்கு எளி தாகிப் போனது.

கட்டுச்சோற்றுக்குள் பெருச்சாளியாக இருந்த காங்கிரசு மற்றும் பா.ஜ.க தொழி லாளர் கூட்டமைப்பு எப்போது கருங்காலித் தனம் செய்து, போராட்டத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம் என்று காத்திருந்தன. ஏற்கனவே தொலைபேசி ஊழியர் போராட் டதைப் பிசுபிசுக்கச் செய்வதில் வெற்றி பெற்ற ராம்விலாஸ் பஸ்வான், இன்னும் சதி மற்றும் வன்மத்தோடு அஞ்சலகத் தொழி லாளர் போராட்டத்தை ஒடுக்கினார்.

வழக்கமாகவே பிழைப்பவாதத் தொழிற்சங்கவாத நடைமுறை மூலம் தேக்க நிலையை எட்டிவிட்டன. போலி கம்யூனிஸ் டுகள் அவர்களால் தற்போதைய உலக மயம், தனியார்மயம், தாராளமயம் என்ற புதிய பொருளாதாரத் தாக்குதலை எதிர் கொள்வதற்கான வழியேதும் காண முடிய வில்லை. எனவே, கையறு நிலையில் மௌ னமாகச் சரணடைவதைத் தவிர வேறு வழி யில்லை. தாங்கள் ஆளும் மாநிலங்களி லேயே போராட்டங்களில் ஈடுபடக் கூடாது என்று எச்சரித்துவரும் இந்த போலிகளிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்!

காங்கிரசு, பா.ஜ.கட்சிகளும், அவர்களு டைய அரசு மற்றும் தொழிலாளர் அமைப் புகள் இப்படித்தான் நடக்கும் என்பது யாரும் அறியாததல்ல. ஆனால், செங்கொ டியும், நீலக்கொடியும் அசைத்துக்கொண்டே தொழிலாளர்களுக்கும், ''தலித்'' மக்க ளுக்கும் துரோகம் செய்யும் போலிகளை என்ன செய்யப்போகிறோம்?

• ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# அப்பாவிகள் மீது வக்கிர அடக்குமுறை கிரிமினல்களுக்கு ராஜமரியாதை

நினைத்துப் பார்க்கவே முடியாத வக்கிரமும், அதிகார வெறியும் பிடித்தலையும் அமைப்புதான் போலீசு என்பதற்கான மற்றொரு சான்றுதான் இந்தப் படம். தாகத்துக்குத் தண்ணீர் கேட்ட கைதியின் வாயில் ஒரு போலீசுக்காரன் சிறுநீர் கழிக்க, இன்னொருவனோ அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இந்த சம்பவம் ஒரிசா மாநிலத்திலுள்ள பேதன் என்ற ஊரின் போலீசு நிலையத்தில் நடந்தது.

கடந்த மார்ச் மாதம் ஹோலி பண்டிகையன்று, ஜம்தோலா கிராமத்தைச் சேர்ந்த சரோஜ்சந்தா என்பவர் போதையில் இரண்டு போலீசுக்காரர்கள் மீது வண்ணப் பொடியைத் தூவியிருக்கிறார். ''ஒரு வெறும் பய தங்கள் மீது பொடியைத் தூவுவதா?'' என ஆத்திரமடைந்த போலீசு, சந்தாவை போலீசு நிலையத்திற்கு இழுத்து வந்து, சட்ட விரோதக் காவலில் அடைத்து, நையப் புடைத்தனர்; தண்ணீர் கேட்டு கெஞ்சிய அவரின் வாயில் சிறுநீர் கழித்து அவமானப்படுத்தினர்.

தெருவோரக் கம்பங்களில் சிறுநீர் அடித்து விட்டு ஓடும் நாய்கூட, இன்னொரு நாயின் மீதோ, வேறு கால்நடைகளின் மீதோ சிறுநீர் கழிப்பதில்லை. நாயிடம் கூடக் காணப்படும் இந்த 'நாகரீகம்' கூட இல்லாத குரூரப் புத்தி கொண்ட போலீசுக்காரன்களை, மக்களின் நண்பர்கள் என்று கூற முடியுமா?

போதையில் தங்கள் மீது வண்ணப் பொடி தூவியதை அவமானமாகக் கருதிய போலீசுக்கு, அவர் வாயில் சிறுநீர் கழிப்பதும், அதை ரசித்து மகிழ்வதும் அவமானகரமானதாகத் தெரியவில்லை என்றால், சாராய போதையைவிட, போலீசிடம் இருக்கும் இந்த அதிகார போதை கொடியதல்லவா?

விசாரணை என்ற பெயரில் போலீசு நிலையத்திற்கு இழுத்து வரப்படும் அப்பாவிகளையும் சந்தர்ப்பவசத்தால் சிறு சிறு குற்றங்கள் செய்து மாட்டிக் கொள்பவர்களையும் போலீசார் இப்படி வக்கிரமான, மனிதத் தன்மையற்ற, சட்ட விரோத வழிகளில் தண்டிப்பது, அவர்களுக்கு கைவந்த கலை. மனித உரிமைக் கமிசனங்கள் அமைக்கப்பட்ட பிறகும், 'உண்மை'யை வரவழைப்பதற்காக போலீசு நிலையத்தில் நடக்கும் சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும், கொட்டடிக் கொலைகளும் மயிரளவுகூட குறைந்துவிடவில்லை. சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற இப்படி அப்பாவிகளை/ஏழைக் குற்றவாளிகளைப் பாய்ந்து குதறும் போலீசும், அதை வேடிக்கை பார்க்கும் அரசும், மேல்தட்டு கிரிமினல் பேர்வழிகளிடம் எப்படி நடந்து கொள்கின்றன?

இதோ இந்தப் படத்தில் நாம் காணும் அறை, கைதிகளை அடைக்கும் அறை போலவா தெரிகிறது? ஆனால், ஜார்கண்ட் முக்தி மோர்சா எம்.பி.க்களுக்கு இலஞ்சம் கொடுத்த குற்ற வழக்கில் தண்டிக்கப் பெற்ற முன்னாள் பிரதமர் நரசிம்மராவைச் சிறை வைக்க, இந்த சொகுசான அறைதான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அருகிலுள்ள படமோ, பீகார்த் தலைநகர் பாட்னா மைய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த மாஃபியா கிரிமினல்கள், சிறைக்குள்ளேயே சொகுசாக வாழ்க்கை நடத்தி வந்ததைக் காட்டுகிறது. அப்படத்தில் குவிந்து கிடக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளும், மின் வசதிகளும் பாட்னா சிறைச் சாலையில் சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனையின் பொழுது கைப்பற்றப்பட்டவை.


ராவிற்கு அரசு நிர்வாகம் சட்டபூர்வமாகச் செய்து கொடுத்த சிறை வசதிகளை, பீகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாஃபியா கும்பல் அரசு நிர்வாகத்தைக் கையில் போட்டுக் கொண்டு சட்ட விரோதமாக அனுபவித்து வந்துள்ளது. ராவ் முன்னாள் பிரதமர் என்பதால், அவர் குற்றவாளி என்ற போதும், அவருக்கு வழங்கப்பட்ட சொகுசான சிறை சட்டபூர்வமாகி விடுகிறது. அதேசமயம், மாஃபியா தலைவர்கள் தங்களுக்குள்ள பணபலம் - அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அனுபவித்து வந்த சலுகைகள் சட்டவி

**தாகத்துக்குத் தண்ணீர் கேட்ட 'கைதி'யின் வாயில் ஒரு போலீசுக்காரன் சிறுநீர் கழிக்க, அதை இன்னொரு போலீசுக்காரன் இரசித்துப் பார்க்கிறான்.**




படிப்பகம்

www.padippakam.com




எம்.பி.க்களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் தண்டிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் ராவுக்காகத் தயாராக இருந்த ''சிறை''.

ரோதமாகிறது. இந்த வேறுபாட்டைத் தவிர, இந்த இரண்டு கிரிமினல் பேர்வழிகளும் தங்கள் குற்றங்களுக்காகத் தண்டிக்கப் பெற்றார்கள் என்று கூற முடியுமா? உண்மையில், குற்றத்தின் தன்மையைக் கொண்டு, குற்றவாளிகளின் சிறை வாழ்க்கைத் தீர்மானிக்கப்படவில்லை. மாறாக, குற்றவாளிகளின் அரசியல் சமூக செல்வாக்கும், குற்றம் செய்தவன் ஏழையா, பணக்காரனா என்பதும்தான் தீர்மானிக்கிறது. இதைத்தான் வர்க்க நீதி என்கிறோம்.

குற்றங்கள் நிரூபிக்கப்படாமலேயே போலீசின் அராஜகத்திற்கும், சட்டவிரோத சிறைத் தண்டனைக்கும் ஆளாகும் விசாரணைக் கைதிகளுக்கும், குற்ற வழக்குகளில் தண்டிக்கப்பட்ட ஏழைக் குற்றவாளிகளுக்கும் நியாயமாக வழங்கப்பட வேண்டிய அடிப்படை மனித உரிமைகளும், சுகாதார வசதிகளும் மறுக்கப்படுவதை சட்டம் தட்டிக் கேட்பதில்லை. அதே சமயம், நாட்டு நலனுக்கே எதிரான குற்றங்களைச் செய்திருந்த போதும், தங்களின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித் தண்டனையில் இருந்து தப்பித்தோ அல்லது சிறை வாழ்க்கையைச் சொகுசாக மாற்றிக் கொண்டோ வாழும் ராவ், ஜெயா, அத்வானி போன்ற ஓட்டுக் கட்சித் தலைவர்களையும், மாஃபியா கிரிமினல் பேர்வழிகளையும் சட்டம் தட்டி வைப்பதில்லை. ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்ற கூப்பாடின் போலித்தனத்தை இவை அம்பலப்படுத்தவில்லையா?

• முத்து

பீகார் தலைநகர் பாட்னாவிலுள்ள மைய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள மாஃபியா கும்பலிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள்: சிறையா? சொகுசு விடுதியா?



## அரசு மருத்துவமனையின் அவல நிலையைக் கண்டித்து தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்

சீர்காழி அரசு மருத்துவமனையின் அவல நிலையைக் கண்டித்தும், சீர்காழி வட்டத்தின் மத்திய மருத்துவமனையாக உள்ள இந்த அரசு மருத்துவமனைக்கு உரிய அளவு மருத்துவர்களையும், செவிலியர்களையும் உடனடியாக நியமிக்கக் கோரியும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் சார்பாக, வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக டிசம்பர் 18-ஆம் தேதியன்று எழுச்சிமிகு தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது.

உலக வங்கி மற்றும் அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து, மருத்துவம், சுகாதாரம் முதலான சேவைத்துறைகளுக்கான மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்படுவதன் விளைவாக அரசு மருத்துவமனைகள் புறக்கணிக்கப்படுவதையும், மருத்துவ சேவையும் தனியார்மயமாகி ஐந்து நட்சத்திர மருத்துவமனைகள் பெருகி வருவதையும், அடிப்படைத் தேவைகள் அறவே புறக்கணிக்கப்பட்டு நாடு மீண்டும் காலனியாகி வருவதையும், இதற்கெதிராக அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கி ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. தோழர்களும், ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்தோரும் உரையாற்றினர். ஆட்சியாளர்களும் ஓட்டுக் கட்சிகளும் புருவத்தை உயர்த்துமளவுக்கு, சுற்றுப்புற பகுதிகளிலிருந்து டிராக்டர்களில் திரண்டு வந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
சீர்காழி வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com



## ஓட்டுப் பொறுக்கிகளின் உல்லாச - ஊதாரித்தனம்

கடந்த 1999-ஆம் ஆண்டின் புயல்-வெள்ளத் தாக்குதலால் நிலைகுலைந்துபோன ஒரிசா மாநிலத்தின் பட்ஜெட் பற்றாக்குறையோ ரூ. 2000 கோடிக்கும் மேலாக உள்ளது. இது தவிர, கடந்த ஆண்டில் தீவிரமாகிவிட்ட வறட்சியினால் எந்த நிவாரணப் பணியும் செய்ய முடியாத அளவுக்குப் பற்றாக்குறை மேலும் அதிகரித்து நிலைமை மோசமாகியுள்ளது. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் என்ற பெயரில் திரியும் சட்டமன்ற உறுப்பினர்களோ அரசாங்க சலுகை-சன்மானங்களைப் பொறுக்கித் தின்று உல்லாச - ஊதாரித்தனத்தில் மிதக்கின்றனர்.

ஒரிசாவின் 147 சட்டமன்ற உறுப்பினர்களும் நூலகக் கமிட்டி, தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் கமிட்டி, மதிப்பீட்டுக் கமிட்டி, அரசுத் துறை நிர்வாக கண்காணிப்புக் கமிட்டி - என 14 கமிட்டிகளில் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் பல கமிட்டிகளின் சார்பில் 66 பேர் கடந்த மூன்று மாதங்களில் உல்லாச சுற்றுலா சென்று வந்துள்ளனர். மற்றவர்கள் அடுத்த கட்டமாக சுற்றுலா சென்று வர ஆயத்தமாகி வருகின்றனர்.

இதில் நூலகக் கமிட்டி மட்டும் விமானப் பயணச் செலவாக ரூ. 7.8 லட்சத்தை விழுங்கியுள்ளது. மதிப்பீட்டுக் கமிட்டி ரூ. 2.48 லட்சமும், அரசுத்துறை நிர்வாகக் கமிட்டி ரூ. 2.94 லட்சமும் விமானப் பயணத்துக்கு வாரியிறைத்துள்ளன. கமிட்டியில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு எம்.எல்.ஏ.-வுக்கும் அன்றாடப் படிச்செலவாக ரூ. 400 வீதம் பெற்று நூலகக் கமிட்டி மட்டும் தனியாக ரூ. 1.2 லட்சத்தை ஏப்பம் விட்டது. இது தவிர மருத்துவச் செலவு, ஆட்டோ-டாக்சி செலவு, தங்குமிடம், உணவு, மருந்து, சலவை முதலான வற்றுக்கு தனியாக ஒரு லட்சம் கருட்டப்பட்டது. இப்படி உத்தேசமாக ஒரு கமிட்டி மட்டும் ரூ. 20-25 லட்சங்களை விழுங்கியுள்ளது. 14 கமிட்டிகள் எனில் ஏறத்தாழ ரூ. 3 கோடி அளவுக்கு மக்களது வரிப்பணம் ஓட்டுப் பொறுக்கிகளின் உல்லாச-ஊதாரித்தனங்களுக்காக வாரியிறைக்கப்பட்டுள்ளது.

நூலகக் கமிட்டியானது ஒரிசாவிலிருந்து மதுரை, கொடைக்கானல், உதகை, பெங்களூர், மைசூர், அந்தமான் தீவுகளுக்கு விமானத்தில் சென்று வந்தது. இங்கெல்லாம் குறிப்பிடத்தக்க முக்கியமான நூலகங்கள் எதுவுமே கிடையாது. ஆனாலும் நூலகங்களைப் பார்வையிட்டு செயல்பாடுகளை அறிந்து வந்ததாக இந்தக் கமிட்டி கூறியது. தாழ்த்தப்பட்டோர் கமிட்டியோ பிற மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோரின் நிலைமை, உரிமைகள், சட்டங்கள், செயல்பாடுகள் பற்றி அறிந்து வருவதாகக் கூறிக்கொண்டு டெல்லி, சிம்லா, டேராடூன், குலு-மனாலி, பத்ரிநாத், ரிஷிகேஷ் என உல்லாச சுற்றுலாவுடன் இந்து புனிதத் தலங்களுக்கு யாத்திரை சென்று வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களின் வசதிகளுக்கான கமிட்டி, நான்கு மாநிலங்களுக்குச் சுற்றுலா சென்று ஆய்வறிந்து வந்தது. இச்சுற்றுலாவுக்குப் பிறகு அது இன்னுமொரு துணைக் கமிட்டியை நிறுவியது. அந்தத் துணைக் கமிட்டியும் சுற்றுலா சென்று வந்தது. பின்னர் இந்த இரு கமிட்டிகளும் கூடி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமான வசதிகளைக் குறிப்பிட்டு பரிந்துரையைச் சமர்ப்பித்தது. சட்டமன்ற உறுப்பினர் விடுதி அறைகளில் கூடுதலாக இரு மின்விளக்குகளைப் பொருத்த வேண்டும் என்பது தான் அந்தப் பரிந்துரை! இதைப் பரிந்துரைக்க இரண்டு கமிட்டிகள்! பாழான மக்கள் வரிப்பணமோ ரூ. 22 லட்சம்!

## உலகமயமாக்கலுக்கு எதிராக மூண்டெழும் போராட்டங்கள்

உலகின் நான்கு மேலாதிக்க வல்லரசுகளில் ஒன்றான ஐரோப்பிய ஒன்றியம் கடந்த டிசம்பர் 7 முதல் 11-ந் தேதி வரை தனது உறுப்பு நாடுகளின் மாநாட்டை பிரான்சிலுள்ள நீஸ் நகரில் நடத்தியது. 15 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இம்மாநாட்டில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ஒன்றியத்தில் சேர்ப்பது பற்றியும், ஒன்றியத்துக்கான ஒற்றை நாணய முறை, ஒன்றிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முறை, உலகமயமாக்கலை விரைவு படுத்துவதற்கான ஏற்பாடுகள் முதலானவற்றைப் பற்றி விவாதிக்கப்பட்டன.

உலகமயமாக்கலின் விளைவாக ஏழைநாடுகள் மட்டுமின்றி, பணக்கார ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலேயே விலை வீழ்ச்சியும் உள்நாட்டுத் தொழில்கள் பாதிப்படைந்து ஆலை மூடலும் ஆட்குறைப்பும் வேலையின்மையும் தீவிரமடைந்து வருகின்றன. ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த சமூக நலத்திட்டங்களுக்கான மானியங்கள் வெட்டப்பட்டு வருவதால், எவ்வித நிவாரண உதவியுமின்றி பல்லாயிரக்கணக்கான உழைக்கும் மக்கள், வீடற்றவர்களாகி வறுமையில் உழல்கின்றனர்.



"ஏ! பெரிய எஜமானர்களே! ஐரோப்பா எப்படி இருக்கிறது?" என்று எள்ளி நகையாடும் சே குவேராவின் பிரபலமான வாசகங்களைக் கொண்ட பதாகைகளுடன் நீஸ் நகரில் உலகமயமாக்கலுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம்.

இந்நிலையில், தமது வாழ்வைப் பறிக்கும் உலக மயமாக்கலுக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த ஐரோப்பிய மக்கள், நீஸ் நகரில் உலகமயமாக்கலைத் தீவிரமாக்க மாநாடு நடப்பதைக் கண்டு கிளர்ந்தெழுந்தனர். பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஆலந்து என அனைத்து ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் திரண்ட 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் டிசம்பர் 6 ஆம் நாளன்று நீஸ் நகரில் மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். நகர எல்லையில் பிரெஞ்சுப் போலீசார் வெளியிலிருந்து எவரும் நுழைய முடியாமல் தடையரண் ஏற்படுத்திய போதிலும், வீதிகளில் 6000-க்கும் மேற்பட்ட போலீசாரைக் குவித்தும், கட்டிடங்களின் உச்சியில் துப்பாக்கி ஏந்திய அதிரடிப்படையை நிறுத்தியும், ஹெலிகாப்டர் மூலம் வானிலிருந்து கண்காணித்து குண்டுவீசும் ஏற்பாடுகள் செய்து அச்சுறுத்திய போதிலும் இந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்திட முடியவில்லை. "குறைந்தபட்ச கூலிக்கு உத்தரவாதம், ஓய்வூதியம், வேலை பாதுகாப்பு, அடிப்படை மருத்துவ-சுகாதார வசதி முதலானவற்றை இழந்து விட்டு நாங்கள் அடிமைகளாக முடியாது; எமது மக்களின் தலைவிதியை ஒருசில ஏகபோக முதலாளித்துவ கும்பல்கள் தீர்மானிப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது; உலகமயமாக்கலின் பெயரால் எங்களை ஏலம் போட்டு விற்பதை அங்கீகரிக்க முடியாது" என்று முழங்கியபடியே செங்கொடிகள், பதாகைகளுடன் முன்னேறிய இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஐரோப்பிய கண்டத்தையே குலுக்கியது.




படிப்பகம்

www.padippakam.com



மாநாடு தொடங்கிய டிசம்பர் 7-ஆம் நாளன்று மீண்டும் தொடர்ந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஒரு லட்சத்துக்கும் மேலான மக்கள் திரண்டனர். சில மாணவர் - இளைஞர் அமைப்பினர் பொலி வியப் புரட்சியாளர் சேகுவேராவின் உருவப்படங்களுடனும், "ஏ பெரிய எஜமானர்களே, ஐரோப்பா எப்படி இருக்கிறது?" என்று எள்ளி நகையாடும் அவரது பிரபலமான வாசகங்களைக் கொண்ட பதாகைகளுடனும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். தொழிற்சங்க இயக் கத்தினர், மாணவர் - இளைஞர் அமைப்பினர், சுற்றுச்சூழல்வாதிகள், விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்ற உலகமய மாக்கலுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தடியடித்தாக்குதலை நடத்தியும் போலீசார் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதனால் ஆத்திர மடைந்த மக்கள் கடைகளைத் தாக்கி, கார்களைக் கவிழ்த்து, ஒரு வங்கிக்குத் தீயிட்டனர்.

இது, ஐரோப்பா கண்டத்தில் முதன்முறை யாக உலகமயமாக்கலுக்கு எதிராக நடந்த போராட்ட மல்ல; ஏற்கனவே ஐரோப்பா கண்டத்தின் பல நாடுகளில் உலக வங்கி, ஐ.எம்.எப். உலக வர்த்தகக் கழகம் ஆகியவற்றின் கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் இத்தகைய போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டங்கள் தொடர் கின்றன. உலகமயமாக் கலின் பெயரால் ஏகாதிபத் திய வல்லரசுகள் நடத்தி வரும் மேலாதிக்கத் தாக்கு தலை முறியடிக்க, ஐரோப் பிய மக்களும் உலகின் ஒடுக்கப்பட்ட ஏழை நாடு களின் மக்களும் ஓர ணியில் திரண்டெழுவதே இன்று உடனடித் தேவையாக உள்ளது.



**பீகார் மாநிலத்திலுள்ள சசாரம் நகரில் அமைந்திருக்கும் மசூதி வளாகத்தை ஆக்கிரமித்து இந்து மதவெறியர்கள் கட்டியுள்ள "திடீர்" இந்துக் கோயில்.**

## "சி.பி.எம். கட்சியில் முதலாளித்துவ எடுபிடிகள் வளர்ந்து விட்டார்கள்!"

### -சி.ஐ.டி.யு. பொதுச்செயலாளரின் பகிரங்கக் குற்றச்சாட்டு

மேற்கு வங்கத்தின் 24 ஆண்டு கால போலி கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு மூப்பு காரணமாக பதவி விலகி ஓய்வு பெற்றதும், அவரது நாற்காலி வாரிசாக புத்ததேவ் பட்டாச்சார்யா புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ளார். அவர் பதவிக்கு வந்ததுமே, "போர்க்குணமிக்க தொழிற்சங்கப் போராட்டங்களை ஒடுக்குவோம்! மாநிலத்தைத் தொழில் மயமாக்க தொழிலாளர்கள் ஒத்துழைத்துத் தியாகம் செய்ய வேண்டும். தொழிலாளர்கள் வேலை நிறுத்தங் களிலோ, போராட்டங்களிலோ ஈடுபட்டால் அரசு ஒருபோதும் சகித்துக் கொண்டு இருக்காது. நாங்கள் முதலாளிகளின் நண்பனாக உள்ள அரசாகவே செயல்படுவோம்!" என்று வெளிப்படையாக அறி வித்தார். மாநில முதல்வர் மட்டுமின்றி மே. வங்க மாநில சி.பி.எம். கட்சிச் செயலாளரான அனில் பிஸ்வாசும் இதேபோல தொழிலாளர் களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

தொழிலாளர் வர்க்கத்தின் தலைவனாகக் காட்டிக் கொண்டு, புரட்சி செய்யப்போவதாக பம்மாத்து செய்து வந்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைவர்களே தொழிலாளர் போராட்டத்தை ஒடுக் குவோம் என்று எச்சரித்து தம்மை துரோகிகளாக இனங்காட்டிக் கொண்டதும், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கமும் தொழிலாளர்களும் வெறுப்படைந்து குமுறிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் சி.ஐ.டி.யு.வின் பொதுச் செயலாள ருமான சிட்டபிரதா மசும்தார், மே. வங்க முதல்வரின் தொழிலாளர் விரோத எச்சரிக்கையைக் கண்டித்துள்ளதோடு, "சி.பி.எம். கட்சியில் முதலாளித்துவ எடுபிடிகள் வளர்ந்துவிட்டார்கள்" என்று பகிரங்க மாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

"கம்யூனிஸ்ட் கட்சியானது தொழிலாளி வர்க்கத்திற்கானது. ஆனால் அது முதலாளிகளுக்கு ஆதரவாகப் பேசுகிறது என்றால், முதலாளி வர்க்கம் கட்சியை உள்ளிருந்தே கைப்பற்றி சீரழிக்க முயற் சிக்கிறது என்றே பொருள். சி.பி.எம். கட்சித் தலைவர்கள் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தி லிருந்து விலகிச் சென்று விட்டதை இது காட்டுகி றது" என்று சாடுகிறார் மசும்தார்.

"சி.பி.எம். மாநிலச் செய லாளர் அனில் பிஸ்வாஸ், மாநிலத்தைத் தொழில் மய மாக்க தொழிலாளர்கள் தியாகம் செய்ய வேண்டும் என்று கூறுவதை சி.ஐ.டி.யு. ஒருபோதும் ஆதரிக்காது. எதற்காக தொழிலாளர்கள் தியாகம் செய்ய வேண்டும்? ஆலை முதலா ளிகள் தியாகம் செய்யட் டுமே! கட்சி செயலாளரின் பேச்சு, தொழிலாளி வர்க்கத்தை அவதூறு செய்து இழிவுபடுத்துவ தாகும். நாடெங்கும் தொழிற்துறை வளர்ச்சி மந்தமாகவே உள்ளது. இதற்கு மே. வங்கம் விதிவிலக்கல்ல. மாநில சட்டமன்றத்தில் தொழிலாளர் துறை சமர்ப்பித்த அறிக்கையின்படி, கடந்த ஆண்டில் தொழிற் சங்கங்கள் நடத்திய 34 வேலைநிறுத்தப் போராட்டங்களால் 39 லட்சம் மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டது. அதேசமயம் கடந்த ஆண்டில் முதலாளிகள் நடத்திய 256 ஆலை மூடல்களால் 176 லட்சம் மனித உழைப்பு நாட்கள் வீணா கியுள்ளது. இந்நிலையில் சி.பி.எம். தலைவர்கள் முதலாளிகளுக்கு ஆதரவாகப் பேசுவது எந்த வகையில் நியாயமாகும்? கட்சியில் தொழிலாளர் வர்க்கத்தின் மூத்த தலைவர்கள் உயர் பதவிகளில் இருந்து கொண்டு இப்படிப் பேசுவது, கம்யூனிச லட்சியத்திலிருந்து விலகிச் செல்லும் துரோகச் செயலாகும்" என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார். நாற்காலி சுகம், கம்யூனிஸ்டுகளைச் சீரழித்ததற்கு வர லாற்றில் ஏராளமான ஆதாரங்கள் உண்டு. "எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் எமது வேலை நிறுத்த உரிமையைக் கைவிட மாட்டோம்" என்று தொழிலாளர் வர்க்கத்தின் சார்பில் எச்சரிக்கையும் விடுத் துள்ளார்.

சி.ஐ.டி.யு. செயலாளரான சிட்டப்பிரதா மசும்தார், போலி கம்யூ னிச புரட்டல்வாதப் பாரம்பரியத்தைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலை வர்தான். எனினும் அவராலேயே சகித்துக்கொள்ள முடியாத அள வுக்கு சி.ஐ.டி.யு. கட்சியானது முதலாளிகளின் கூட்டாளியாகி, பாட்டாளிகளின் பகையாளியாக மாறி நிற்கிறது. மசும்தாரின் குற்றச் சாட்டு சி.பி.எம். கட்சிக்குள் கலகத்தை ஏற்படுத்துமா அல்லது அதி ருப்தியுற்றுள்ள சி.பி.எம். சங்கத்தினருக்கு வடிகாலாக அமைந்து சம


படிப்பகம்

www.padippakam.com



ரசப்படுத்துவதற்கான ஏற்பாடா என்பதை உறுதியாகக் கூற இயலாது. இருப்பினும் சி.பி.எம். மின் துரோகத்தை மீண்டும் அம்பலப்படுத்திக் காட்டும் சிட்டப்பிரதா மசும்தாரின் பகிரங்கக் குற்றச்சாட்டானது, சி.ஐ.டி.யு. வில் உள்ள வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களை விழிப் புறவே செய்யும்.

## இந்து வெறியர்களின் சட்ட விரோத ஆக்கிரமிப்பு

இந்தியாவிலுள்ள மசூதிகள் அனைத்தும் இந்துக்கோயில்களை இடித்துக் கட்டப்பட்டவை என்பது இந்து வெறியர்களின் வாதம். இதன்படியே அயோத்தியிலுள்ள பாபர் மசூதியில் திருட்டுத்தனமாக இராமன் சிலையை வைத்து வழிபாடு நடத்தி, இது இராமன் கோயில்தான் என்று இந்து வெறியூட்டி, நாடெங்கும் நரவேட்டையை நடத்தி பாபர் மசூதியை இடித்துத் தள்ளினர். இப்போது இதே உத்தியுடன் பீகாரின் சசாரம் நகரில் உள்ள ஷெர்ஷா மசூதியை இடித்துவிட்டு இந்து கோயிலைக் கட்ட இந்துவெறியர்கள் கீழ்த்தரமான முயற்சியில் ஈடுபட்டுள்ள விவகாரம் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது.

ஷெர்ஷா சூரி - ஆரம்ப கால மொகலாய மன்னர்களில் ஒருவராவார். அவரது குறுகிய ஆட்சிக்காலத்தில் (1539-1545) பீகாரிலுள்ள சசாரம் நகரில் ஐந்து அடுக்கு கொண்ட அழகிய மசூதியை நிறுவினார். அதைச் சுற்றி ஏரியையும் பூந்தோட்டங்களையும் அமைத்து மத்திய கால சிற்பக் கலைக்குப் புது மெருகூட்டினார். இந்த மசூதியும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் அரிய கலைச் சின்னமாக இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பொறுப்பில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பொறுப்பிலுள்ள இடத்தை ஆக்கிரமிப்பதோ, புதிய கட்டிடங்கள் எழுப்புவதோ சட்டப்படி குற்றமாகும். ஆனால் இந்து வெறியர்கள் மசூதியின் ஏரிக்கரையை ஒட்டிய வளாகத்தில் ஒரு இந்துக் கடவுள் சிலையை நிறுவி 1975-இலிருந்து வழிபாடு செய்து வந்தனர். அதன்பிறகு ஒரு தனியார் ஆரம்பப்பள்ளியை நிறுவினர். 1977-இல் திடீர் கடவுள் சிலை வைத்த இடத்தில் சர்வேஸ்வர் மகதேவ் என்ற கடவுளின் பெயரால் சிறிய கோயிலைக் கட்டினர். இச்சட்ட விரோத ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தொல்பொருள் ஆய்வுத்துறை, நீதிமன்றத்தில் முறையிட்ட போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர், நிர்பந்தங்கள் காரணமாக பள்ளிக்கூடம் மூடப்பட்ட போதிலும் திடீர்கோயில் நீடித்து வந்தது. பின்னர் 1982-இல் இக்கோயிலுக்குச் சுற்றுக் சுவர் எழுப்பப்பட்டது. புதிய கட்டிடம் கட்ட நிதி திரட்டப்பட்டது. இதை எதிர்த்து அப்போது பாபர் மசூதி பாதுகாப்புக் கமிட்டியின் தலைவராகச் செயல்பட்ட சையத் சகாபுதீன் நாடாளுமன்றத்தில் முறையிட்டார். அதையடுத்து நடந்த மதவெறிக்கலவரத்தில் 12 பேரை இந்து வெறியர்கள் கொன்றொழித்தனர்.

சிறிது காலத்திற்குப் பின்னர் இந்து வெறியர்கள் ஏரிக்கரையில் இந்துமதச் சடங்குகளுக்கான மேடை ஒன்றை கட்டியமைத்து, இந்துக் களைத் திரட்டி மாதாந்திர இந்து சடங்குகளை நடத்தினர். பின்னர் ஒரு மண்டபம் கட்ட கான்கிரீட் தூண்களை எழுப்பினர். 1999-இல் ஜவாஹிர் பிரசாத் என்ற பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் இந்து வெறியர்களின் துணையோடு இதை திருமண மண்டபமாக கட்டியமைத்தார். அரசு பாதுகாப்பில் உள்ள இடத்தில் அத்துமீறி மண்டபம் கட்டுவதைத் தடுக்க முற்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சித் துறை கண்காணிப்பாளரையும் அவரது குடும்பத்தாரையும் இந்து வெறியர்கள் தாக்கிச் சூறையாடினர். போலீசாரோ இந்து வெறியர்களுக்கு ஆதரவாக நின்று தொல்பொருள் ஆராய்ச்சித்துறை கண்காணிப்பாளர் மதக் கலவரத்தைத் தூண்டியதாகப் பொய் வழக்கு சோடித்தனர். மண்டபம் கட்ட அனுமதிக்காவிடில் கரசேவை நடத்தப்போவதாக இந்துவெறி குண்டர்கள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர்.

இச்சட்ட விரோத ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தொல்பொருள் ஆராய்ச்சித்துறை நீதிமன்றத்தில் முறையிட்ட போது, ரோடாஸ் நீதிமன்றமோ, ''இது மத நம்பிக்கை தொடர்பான விவகாரம்; மாநில அரசிடமிருந்து தனிச்சிறப்பான உத்தரவுகள் இல்லாமல் இதில் தலையிட முடியாது'' என்று நழுவிக்கொண்டது. பின்னர் மாநில ஆளுநர், அரசுத் தலைமைச் செயலரிடம் முறையிட்டும் பத்திரிகையாளர்களிடம் இந்து வெறியர்களின் ஆக்கிரமிப்பு அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தியும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் செயல்பாட்டில் இறங்கிய பிறகே, ஷெர்ஷா மசூதியைச் சுற்றி தடையுத்தரவு போடப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டு காலமாக இந்து வெறியர்கள் திட்டமிட்டுச் செய்து வந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல், இது பற்றிய விசாரணை நீதிமன்றத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.



புயலுக்கு ஒதுங்கிய தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்களை வெளியே தள்ளி, வன்னிய சாதி வெறியர்களால் சனாதனத்தின் புனிதம் காக்கப்பட்ட திரௌபதி அம்மன் கோயில்.

இந்து வெறியர்களின் சூழ்ச்சிகள் - சதிகளுக்குப் போலீசும் நீதித்துறையும் அதிகார வர்க்கமும் துணையாக நிற்பதை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. அந்த தைரியத்தில்தான் நேற்று பாபர் மசூதியை இடித்த இந்துவெறியர்கள் இன்று, ஷெர்ஷா மசூதியை ஆக்கிரமித்துக் கொண்டு இடிக்கத் துடிக்கின்றனர். கடந்த நவம்பரில் டெல்லி குதுப்மினாரில் திடீர் பிள்ளையார் சிலையை வைத்து யாகம் நடத்தக் கிளம்பினர். செஞ்சிக்கோட்டையிலுள்ள மசூதியை இடிக்க திடீர் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துகின்றனர்.

## ஓட்டுக்குச் சமூக நீதி! உள்ளுக்குள் சாதிவெறி!

புதுவை மாநிலம் வில்லியனூரில் இருந்து வடக்கில் 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது உறுவையார் கிராமம். இக்கிராமத்தில் திரவுபதி அம்மன் கோயில் நூறு ஆண்டு கால பழமை வாய்ந்தது. 1983 ஆம் ஆண்டு இக்கோயிலில் நடந்த தீமிதி விழாவின்போது வன்னிய சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் சென்ற மாதம் அடித்த புயலில் உறுவையார் நடுநிலை பள்ளியிலிருந்த தூங்குமூஞ்சி மரம் வகுப்பறைகளின் மேல்



படிப்பகம்


www.padippakam.com



சரிந்து விழுந்துள்ளது. மழை விடுமுறை முடிந்து வந்த மாணவர்களும் ஆசிரியர்களும் கட்டிடங்கள் சேதமடைந்திருப்பதைக் கண்டு திகைத்தனர். அதே ஊரிலுள்ள முன்னாள் சபாநாயகர் பழனிநாதனிடம் நிலைமையைக் கூறி அருகிலுள்ள திரவுபதி அம்மன் கோயிலில் வகுப்புகள் நடத்த இடம் கோரினர் ஆசிரியர்கள். அவரும் அனுமதிக்க கோயிலுக்குள் வகுப்பை நடத்த மாணவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

அப்போது இவ்வூரைச் சேர்ந்த வன்னிய சாதி வெறியர்கள் சிலர் சேரி மாணவர்களை எப்படி கோயிலுக்குள் அழைத்து வரலாம் என்று ஆசிரியர்களை மிரட்டியுள்ளனர். ''பள்ளியில் அனைத்துச் சாதி மாணவர்களும் படிக்கின்றனர். இதில் சேரி மாணவர்களை மட்டும் வெளியேறச் சொல்வது நியாயமில்லை'' என்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த வன்னிய சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பிடித்துக் கோயிலிலிருந்து வெளியேற்றி உள்ளனர். சாதி வெறியர்களுக்கு எதிராக எதையும் செய்ய முடியாமல் ஆசிரியர்கள் கோயிலுக்கு எதிரேயுள்ள திடலில் வகுப்பை நடத்தியுள்ளனர்.

வன்னிய சாதி வெறியர்களின் மேல்சாதி அகம்பாவம் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் புயலுக்குக் கூட கோயிலுக்குள் அனுமதிக்காமல் தீண்டாமையைக் கடைபிடிக்கிறது. ஆனால் அந்த சாதிவெறியையே தன் அரசியல் ஆதாயத்துக்காக அறுவடை செய்து கொள்ளும் இராமதாசு, சமூக நீதிப் போராளியாக உலா வருகிறார். அதே கட்சியைச் சேர்ந்த காடு வெட்டி குரு, தாழ்த்தப்பட்ட மக்களின் கோயில் நுழைவுப் போராட்டங்களை ஆதரிப்பதாக பம்மாத்துக் காட்டுகிறார். ஓட்டுக்கு சமூக நீதி! உள்ளுக்குள் சாதிவெறி! இதுதான் இவர்களின் யோக்கியதை!



நேற்று, தேவாலயம்; இன்று, இந்துக் கோயில்: இந்து மதவெறியர்களின் அட்டூழியம்.

## குஜராத் : தொடரும் இந்து மதவெறி அட்டூழியம்

**வி**சுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள் ஆகிய இந்துவெறி பரிவாரங்களின் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் வட மாநிலங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் சிறுபான்மை கிறித்துவர் மீதான வன்முறை வெறியாட்டம் பல்வேறு வடிவங்களில் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கிறித்துமஸ் கொண்டாடப்படும் டிசம்பர் மாதங்களில் திட்டமிட்டே கட்டவிழ்த்து விடப்படும் இத்தாக்குதல்கள் இம்முறை நவம்பர் மாதமே தொடங்கிவிட்டது.

குஜராத் டாங்ஸ் மாவட்டத்தில் உள்ளது சிண்டியா கிராமம். கடந்த நவ-26-ம் தேதி இரவோடு இரவாக இங்குள்ள கிறித்துவ தேவாலயம் இந்து மதவெறியர்களால் சூறையாடப்பட்டு கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. தேவாலயத்தின் உச்சியில் இருந்த சிலுவையை அகற்றிவிட்டு காவிக்கொடியை நாட்டியுள்ளனர். வழிபடும் இடத்தில் இந்து தெய்வ உருவங்களைக் கொண்டு வந்து வைத்துள்ளனர். விசுவ இந்து பரிஷத் தலைமையில் நடந்த இச்சூறையாடல் - அடாவடி தனத்துக்கு போலீசுத்துறையும் உடந்தையாக இருந்துள்ளது.

இச்சம்பவத்தை நியாயப்படுத்தும் விதமாக 'அரசாங்க சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக எதுவும் நடக்கவில்லை' என்று கொக்கரிக்கிறது விசுவ இந்து பரிஷத்.

தேவாலயம் இருந்த இடத்துக்கு உரிமையாளராக இருந்தவர் புண்யபாய் கட்வாலியா. இவர் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர். இவருடைய தகப்பனாரிடம் 1948-லிருந்து இந்நிலம் சொந்தமாக இருந்துள்ளது. 1975 முதல் புண்யபாயிடம் வாரிசுரிமை படி வந்து சேர்ந்தது. அவர் இதை 1992-ம் ஆண்டு உள்ளூரில் இருக்கும் ஒரு பார்சியிடம் விற்றுவிட்டார். அதற்கு சற்றுமுன்னர்தான் புண்யபாய் கிறித்துவராக மதம் மாறியிருந்தார். 1996 முதல் அந்த இடத்தை சிண்டியா மற்றும் ஏழு கிராமத்தைச் சேர்ந்த கிறித்துவர்கள் வழிபடும் தலமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் புண்யபாய் மீண்டும் இந்துவாக மதம் மாறியிருக்கிறார். இதைப் பயன்படுத்திக் கொண்ட விசுவ இந்து பரிஷத் ''பழங்குடியினர் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலத்தை வாங்கவோ விற்கவோ முடியாது. மேலும் புண்யபாய் கிறித்துவராக இருந்தபோது அந்நிலத்தைத் தேவாலயமாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியுமே தவிர, அவர் இந்துவாக மாறிய பின்னாலும் அப்படியே இருப்பது வரம்பு கடந்த செயலாகும்'' என்கிறது.

கிறித்தவ மதத் தலைவர்களோ ''1996-க்குப் பிறகு இந்த இடம் ஏழு கிராம மக்களுக்கும் சொந்தமாகிவிட்டது. இரவோடு இரவாக மாற்றியமைக்க எந்த தனிப்பட்ட நபருக்கும் உரிமையில்லை'' என்கின்றனர்.

ஒரு மதத்தினர் வழிபடும் தலத்தை இன்னொரு மதத்தினர் இடித்து, மாற்றியமைப்பது என்பதிலிருந்து பிரச்சனையை உரிமையாளரின் மதமாற்றம் தொடர்பான விவாதமாக மாற்றுவதில் இந்துமதவெறியினர் வெற்றி பெற்றுள்ளனர். இதைப் பற்றி கருத்து தெரிவித்துள்ள முதல்வர் கேசுபாய் பட்டேல் ''இது வெறும் சொத்துரிமை பிரச்சனை'' என்று நழுவிக் கொண்டார். வழக்கு குஜராத் உயர் நீதி மன்றத்தில் இருப்பதால் கருத்துக் கூற எதுவுமில்லை என்கிறது மாநில நிர்வாகம்.

இதற்கிடையே, கேசுபாய் பட்டேல் அரசாங்கம் கிறித்துவ தலைவர்களிடையே எழுந்த முணுமுணுப்பை, சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி அடக்கியதோடு, டாங்ஸ் மாவட்டமெங்கும் போலீசைக் குவித்து அச்சுறுத்துகிறது. அதேநேரம் கிறித்துமஸ் அன்று விசுவ - இந்து பரிஷத் தலைமையில் பேரணி நடத்தவும் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஒருதலை பட்சமான நடவடிக்கை பா.ஜ.க. மற்றும் விசுவ இந்து பரிஷத் ஆகிய சங்கப் பரிவாரங்களின் கூட்டை மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது.

மேலும் தேவாலயக் கட்டிடத்தின் உரிமையாளர் இந்துவாக மதம் மாறிவிட்டார் என்பதாலேயே அதைக் கோயிலாக்க வேண்டும் என்று சந்தர்ப்பவாதமாக நியாயப்படுத்துகின்றன இந்துவெறி அமைப்புகள். அப்படியென்றால் கோயில் நிலத்துக்கு உரிமையான ஒரு இந்து, முசுலீமாக மதம் மாறினால் கோயிலை மசூதியாக்க ஒப்புக் கொள்வார்களா?

www.padippakam.com

## பாமாயில் இறக்குமதிக்கு எதிராக கேரள மக்களின் போர்க் கோலம்


# மீண்டும் அந்நியப் பொருள் புறக்கணிப்பு சுதந்திரப் போர்!

அண்டை மாநிலமான கேரளத்தில் பாமாயில் இறக்குமதிக்கு எதிராகத் தொடங்கப்பட்டுள்ள தென்னைத் தொழில் பாதுகாப்பு இயக்கம், மக்கள் ஆதரவு பெற்ற உணர்வு பூர்வமான பேரியக்கமாக மாநிலமெங்கும் பற்றிப் படர்ந்து வருகிறது.

இந்தோனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து கட்டுபாடின்றி பாமாயில் இறக்குமதி செய்யப்படுவதன் விளைவாக, கேரளாவில் தேங்காய் எண்ணெய் விலை அண்மைக்காலமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தேங்காயின் விலை ரூ. 7-லிருந்து ரூ. 2-ஆக சரிந்து விழுந்ததால் பாரம்பரிய தென்னை விவசாயம் நசிந்து போனது. கேரளத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பது தென்னை சார்ந்த தொழில்கள்தான். கேரளத்தில் ஏறத்தாழ 10 லட்சம் ஹெக்டர் நிலத்தில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. மாநிலமெங்கும் கொப்பரைத் தேங்காய், கயிறு, மிதியடி, தேங்காய் எண்ணெய் தயாரிப்பு என ஏராளமான குடிசைத் தொழில்களும் சோப்பு தயாரிக்கும் சிறு தொழில்களும் தென்னை விவசாயத்தைச் சார்ந்தே உள்ளன. பல லட்சக்கணக்கான விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கும் முக்கிய தொழிலாக விளங்கிய தென்னை விவசாயம், தேங்காய் விலை வீழ்ச்சியால் மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

தேங்காய் விலை வீழ்ச்சியைக் கண்டித்தும், தென்னை விவசாயத்தையும் விவசாயிகளையும் காப்பாற்றக்கோரியும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் விவசாயிகளும் உழைக்கும் மக்களும் பல முறை கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்திய போதிலும் ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடி அரசியல் ஆதாயமில்லாததால் ஓட்டுக் கட்சிகளும் இப்போராட்டங்களை ஆதரிக்கவுமில்லை.

கேரளாவில் தேங்காய் விலை வீழ்ச்சிக்கும், தேங்காய் எண்ணெய் தொழில் நசிவுக்கும் முக்கிய காரணமே, வெளிநாடுகளிலிருந்து கட்டுப்பாடின்றி இறக்குமதியாகும் பாமாயில் தான். 20 ஆண்டுகளுக்கு முன்பு பற்றாக்குறை - தட்டுப்பாடு காரணமாக தேங்காய் எண்ணெய் கிலோ ரூ. 70-அளவுக்கு விற்றபோது, தற்காலிக ஏற்பாடாக மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாயில் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டது. விலை மலிவு காரணமாக பின்னர் முழுமையாக பாமாயில் மட்டுமே பயன்படுத்தும் நிலைக்கு கேரளா தள்ளப்பட்டது. பாமாயில் இறக்குமதி - வர்த்தகத்தில் தரகுப் பெருமுதலாளிகளும் அனைத்து ஓட்டுக்கட்சி ஆட்சியாளர்களும் கொழுத்த ஆதாயமடைந்தனர். பாரம்பரிய தென்னை விவசாயிகளோ விலை வீழ்ச்சியால் போண்டியாகிப் போயினர். குறிப்பாக, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பாமாயில் தாராளமாக இறக்குமதி செய்யப்படுவதன் விளைவாக, கேரளாவில் ஆண்டுக்கு 2.4 லட்சம் டன் அளவுக்கு பாமாயில் சமையல் எண்ணெயாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துவது வெறும் 40,000 டன் அளவுக்குச் சுருங்கியது.



கோகோ-கோலா, பாமாயிலுக்குத் தடை! கேரள தென்னை பாதுகாப்பு இயக்கத்தின் எழுச்சிப் பேரணி.

கூரசுண்டு கிராமத்தில் பாமாயிலுக்குத் தடை விதித்து மக்கள் கட்டியுள்ள அறிவிப்பு



தேங்காய் விலை வீழ்ச்சிக்கான உண்மையான காரணத்தைப் படிப்படியாக உணர்ந்த கோழிக்கோடு மாவட்டத்தின் கூரசுண்டு கிராமத்து விவசாயிகள், கடந்த அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து ''பாமாயிலைப் புறக்கணிப்போம்! பாரம்பரிய தென்னை விவசாயத்தைப் பாதுகாப்போம்!'' என்ற முழக்கத்துடன் பாமாயிலை பயன்படுத்த வேண்டாம் என மக்களிடம் விளக்கி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டனர். தொடக்கத்தில் ஒருசிலராக இருந்த போதும் இந்த இயக்கம் படிப்படியாக் விவசாயிகளின் ஆதரவும் பங்கேற்பும் கொண்ட இயக்கமாக வளர்ந்தது. வியாபாரிகள் இக்கிராமத்தில் பாமாயில் விற்பதை மனமுவந்து நிறுத்தினர். கிராம மக்கள் முழுமையாக தேங்காய் எண்ணெயை மட்டுமே சமையலுக்குப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்தத் தகவல் கோழிக்கோடு மாவட்டத்தின் பல கிராமங்களுக்கும் பரவி, ''கர்ஷக முன்னேட்ட சமிதி'' எனும் அமைப்பின் பெயரால் பாமாயில் புறக்கணிப்பு இயக்கம் மாவட்டம் முழுவதும் பற்றிப் படர்ந்தது. அதைத் தொடர்ந்து அடுத்துள்ள கண்ணனூர் மாவட்டமும் இந்தப் பாதையில் சென்று பாமாயிலை முற்றாகப் புறக்கணித்துள்ளது. இதன் விளைவாக கேரளத்தில் கொப்பரைத்

www.padippakam.com

தேங்காயின் விலையும், தேங்காய் எண்ணெயின் விலையும் தற்போது வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீளத் தொடங்கியுள்ளது. பாமாயிலை புறக்கணிப்பதாக தொடங்கப்பட்ட இந்த இயக்கம், இப்போது பெப்சி - கோகோ கோலா புறக்கணிப்பு இயக்கமாக முன்னேறத் தொடங்கியுள்ளது. கோழிக்கோடு, கண்ணனூர் மாவட்டங்களில் பரவலாக இளநீர் கடைகள் தொடங்கப்பட்டு, மலிவு விலையில் இளநீர் விற்பனை செய்யப்படுகிறது. பாமாயில் புறக்கணிப்பு இயக்கம் வீச்சாகப் பரவத் தொடங்கியதும் கேரள உணவு விடுதிகள் சங்கமும், வர்த்தகர் அமைப்புகளும் தேங்காய் எண்ணெயை மட்டுமே விற்பனை செய்யவும், சமையலுக்குப் பயன்படுத்தவும் தீர்மானித்துள்ளன. இந்த இயக்கம் மாநிலமெங்கும் பிரபலமடையத் தொடங்கியதும், போலி கம்யூனிஸ்ட் அரசாங்கம் கூட்டுறவு அங்காடிகளில் பாமாயில் விற்பனை செய்வதை அடியோடு நிறுத்தி விட்டது.

கேரள மக்களின் பாமாயில் புறக்கணிப்பு இயக்கம், உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாக்கும் இயக்கம்தான்! இருப்பினும் இத்தகைய தற்காப்பு நடவடிக்கைகளினால் அன்னிய பொருட்களின் இறக்குமதியையும், ஏகாதிபத்தியங்களின் கொள்ளையையும் ஒருபோதும் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஏனெனில் வரும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, பிலிப்பைன்ஸ், மலேஷியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து கட்டுப்பாடுகள் ஏதுமின்றி தேங்காய் எண்ணெயை இந்திய அரசு இறக்குமதி செய்ய உள்ளது. இது இந்தியத் தேங்காய் எண்ணெயைவிட ஒப்பீட்டளவில் விலை குறைவானதாகும். இந்நிலையில் பாமாயிலைப் புறக்கணித்து தேங்காய் எண்ணெயை மட்டுமே பயன்படுத்துவது எனறு தீர்மானித்தாலும், அந்நிய இறக்குமதியைத் தடுத்து நிறுத்தாமல் உள்நாட்டு தென்னைத் தொழிலை கேரள மக்களால் பாதுகாத்திட முடியாது. விலை குறைவான வெளிநாட்டுத் தேங்காய் எண்ணெயை நோக்கி மக்கள் போவதைத் தடுக்கவும் முடியாது. எனவே உள்நாட்டுத் தென்னைத் தொழிலைப் பாதுகாக்க, அந்நிய இறக்குமதியை உடனடியாகத் தடுத்து நிறுத்திட வேண்டும். உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக்கு அடிபணிந்து கிடக்கும் அனைத்து ஓட்டுக்கட்சி ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். கட்டுப்பாடற்ற அந்நிய இறக்குமதியால் உள்நாட்டுத் தொழிலும் விவசாயமும் நாசமாக்கப்பட்டு, நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிரான போராட்டமாக இதை வளர்த்தெடுக்க வேண்டும். இல்லையேல், கேரள மக்களின் உள்நாட்டுத் தென்னைத் தொழில் பாதுகாப்பு இயக்கம், வெறும் பகற்கனவாகவே முடியும்.

• முத்து

### ஈழ வேந்தன் நாடு கடத்தல்:

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு பலிகடா ஈழ அகதியா?

இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ள ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள ஈழ அகதிகள் ஆதரிக்கவோ, பிரச்சாரம் செய்யவோ கூடாது; ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கவோ உதவவோ கூடாது; இந்தியாவில் தொடரும் தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கக் கூடாது. தமிழினவாத அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. ஈழ அகதிகள் உணர்வற்ற அடிமைகளாக மட்டுமே இருக்க வேண்டும். இதை மீறினால் நாடு கடத்தப்படுவார்கள். - இப்படியொரு எழுதப்படாத குரூரமான சட்டத்தை இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, அகதியாக வந்த தமிழீழ விடுதலை முன்னணியின் (TELF) பொதுச் செயலாளரும் பத்திரிகையாளருமான ஈழ வேந்தன், இந்திய அரசால் இலங்கைக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ளார். கடந்த டிசம்பர் 4-ஆம் தேதியன்று அதிகாலையில் அவரது வீட்டைச் சூழ்ந்த போலீசாரும் மத்திய உளவுத்துறை அதிகாரிகளும் அவரை வலுக்கட்டாயமாக நெட்டித் தள்ளிச் சென்று, சென்னை விமான நிலையத்தில் புறப்படக் காத்திருந்த சிறீலங்கா விமானத்தில் ஏற்றி இலங்கைக்குத் துரத்தியடித்துள்ளனர். இந்த அடாவடித்தனம் தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்படாமலேயே நடந்துள்ளது.



நாடு கடக்கப்பட்ட ஈழ வேந்தன்.

''ஈழ வேந்தன் ''விசா'' காலம் முடிந்த பின்னரும் இந்தியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தார். தடை செய்யப்பட்ட ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனுடன் பத்திரிகையாளர் கூட்டங்களில் பங்கேற்றார். சந்தனக் காட்டு வீரப்பன் மற்றும் பழ. நெடுமாறனின் தமிழ் தேசியக் கோரிக்கையை ஆதரித்து இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார். வீரப்பனுடன் சேர்ந்துள்ள தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ் தேசிய மீட்சிப் படை ஆகிய பிரிவினைவாத - தீவிரவாத குழுக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பது, இக்குழுக்களை ஈழ வேந்தன் ஆதரிப்பது ஆகியவற்றால் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்பட்டுள்ளது'' என்று நியாய வாதங்களைக் கூறி மத்திய அரசு ஈழவேந்தனை நாடு கடத்தியுள்ளது.

பல பத்தாயிரக் கணக்கான ஈழ அகதிகளோடு 1981-இல் இந்தியாவில் தஞ்சமடைந்தவர்களில் ஒருவர்தான் ஈழவேந்தன். கடவுச் சீட்டுடன் (விசா) ஒரு அகதி ஒரு நாட்டில் தங்கியிருக்க அடிப்படையே இல்லை. மேலும், ஏறத்தாழ 20 ஆண்டுகாலமாக அவர் தமிழகத்தில் தான் தங்கியுள்ளார். இத்தனை ஆண்டுக் காலமும் தஞ்சமடைந்த இந்த அகதியிடம் கடவுச்சீட்டு பற்றி விசாரிக்காத மத்திய அரசு, இப்போது திடீரென ''விசா'' காலம் முடிந்த பிறகும் சட்டவிரோதமாக தங்கியிருந்தார் என்று கூப்பாடு போட்டு விரட்டியடித்துள்ளது.

ஆனால், விசா இல்லாமல் 'அகதி'யாக வந்த சீன எதிர்ப்பு - கம்யூனிச எதிர்ப்பாளர்களான தலாய்லாமா கும்பல் இந்தியாவில் எவ்வளவு காலமும் தங்கியிருக்கலாம்; தவறில்லை. இந்தக் கும்பல் இந்தியாவிலிருந்து கொண்டு சீனாவுக்கு எதிராகப் பிரச்சார - ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம்; தவறில்லை. தலாய்லாமா கும்பலுக்கு பழத் தோட்டப் பண்ணைகளும் பங்களாக்களும் அமைத்துக் கொடுத்து இந்திய அரசு பாதுகாத்து பராமரித்து வருகிறது. ஏனெனில் லாமாக்கள் இந்திய அரசுக்கு விசுவாசமான கும்பல்.

ஆனால் ஈழ அகதிகளோ பிரிவினைவாத - பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்;




தமிழகத்தைத் துண்டாட சதி செய்பவர்கள்; விடுதலைப் புலிகளுக்கு உணவும் மருந்தும் எரிபொருளும் ஆயுதங்களும் கடத்துபவர்கள் என்று அவதூறு செய்து அடக்குமுறையை ஏவி ஈழ அகதிகள் மீது ஒருதலைப்பட்சமான அணுகுமுறையையே இந்திய அரசு மேற்கொள்கிறது. அனைத்துலக நாடுகள் அங்கீகரித்துள்ள அகதிகளின் அரசியல் - ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து, ஈழ அகதிகளை கிரிமினல் குற்றவாளிகளைப் போல இழிவுபடுத்தி ஒடுக்கி வருகிறது.

கடந்த நவம்பர் 30-ந் தேதியன்று நாடாளுமன்ற மேலவையில் உள்துறை அமைச்சரான அத்வானி, "தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகக் கடலோரப் பகுதிகளில் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். மத்திய - மாநில உளவுப் படைகள் இவற்றைத் தீவிரமாகக் கண்காணித்துக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்று எச்சரித்தார். தி.மு.க. தலைவரான கருணாநிதியோ, தமது கட்சி விடுதலைப் புலிகளை ஆதரிப்பதை ஏற்கனவே நிறுத்திவிட்டதாகவும், வீரப்பனுடன் சேர்ந்துள்ள தமிழினத் தீவிரவாதக் குழுக்களைத் தடை செய்வது பற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரைப்பதாகவும் அத்வானியை ஆதரித்துப் பின்பாட்டுப் பாடினார். இவற்றின் தொடர்ச்சியாகவே, ஈழ அகதிகள் எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கும் வகையிலே ஈழ வேந்தனை விரட்டும் காட்டுமிராண்டித்தனம் நடந்துள்ளது. அத்வானியின் பொறுப்பிலுள்ள உள்துறை அமைச்சகத்தின் உத்தரவுப் படியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வீரப்பன் விவகாரத்தைத் தொடர்ந்து பழ. நெடுமாறனுக்கு ஒளிவட்டம் போட்டு ஆங்காங்கே பாராட்டுக் கூட்டங்கள் நடத்தி தமிழினக் குழுக்கள் தமிழ் தேசிய கோரிக்கைக்குச் சூடேற்றக் கிளம்பியுள்ளன. இவற்றை தீவிரவாதம், பிரிவினைவாதம் என்று பீதியூட்டி பார்ப்பன பாசிச ஜெயா - துக்ளக் "சோ" கும்பலும் பார்ப்பன பத்திரிகைகளும் மூர்க்கமான பிரச்சாரத்தில் இறங்கி, வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் இதையே காரணம் காட்டி அரசியல் ஆதாயமடைத் துடிக்கின்றன. இதை முறியடித்து தம்மை தேசிய ஒருமைப்பாட்டு வாதிகளாக நிரூபித்துக் காட்ட ஒருபுறம் வீரப்பனைப் பிடிக்க அதிரடிப் படைகளைக் காட்டுக்குள் ஏவியுள்ள மத்திய அரசு, மறுபுறம் தமிழினவாதக் குழுக்களை அச்சுறுத்திப் பணிய வைக்க ஈழவேந்தனை அடாவடித்தனமாக நாடு கடத்தியுள்ளது. அடுத்து, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனை இலங்கைக்கு விரட்டவும் ஏற்பாடுகள் நடந்து வருவதாக கிசுகிசு பத்திரிகைகள் எழுதுகின்றன.

இந்தனைக்கும் பிறகும் "புரட்சிப் புயல்" வைகோவோ, "போராளி" இராமதாசோ இந்திய அரசின் இந்த குரூரமான நடவடிக்கையை எதிர்த்து வாயே திறக்கவில்லை. ஈழ விடுதலை ஆதரவு, புலி ஆதரவு என்று சவடால் அடித்துவந்த இந்தப் பிழைப்புவாத துரோகக் கும்பலை எதிர்த்து எந்தவொரு தமிழினக் குழுவும் வாய் திறக்கவில்லை.

தெற்காசிய பிராந்திய மேலாதிக்க வல்லரசான இந்தியா, ஈழ விடுதலையை ஆதரிக்க ஒரு காரணம் இல்லை. அதிலும் அகண்ட பாரத நோக்கத்துடன் கிளம்பியுள்ள இந்துவெறி பா.ஜ.க. கும்பல், ஈழ விடுதலையை ஆதரிக்க எந்த அடிப்படையும் இல்லை. இலங்கை மீது மேலாதிக்கம் செலுத்த, அவசியமானால் ஈழப் பிரச்சினையை பகடைக் காயாக இந்திய அரசு பயன்படுத்தலாம். அதை நம்பி பா.ஜ.க. அரசிடம் ஈழ விடுதலைக்கு ஆதரவு கோருவதுதான் தமிழினப் பிழைப்புவாதிகளின் நோக்கமாக உள்ளது.

ஈழம் மலர்ந்தால் அது இந்தியாவுக்குச் சாதகமானது; ஈழ விடுதலையால் தமிழ்நாட்டில் பிரிவினை ஏற்படாது என்றெல்லாம் சொல்லி ஈழ விடுதலையை பா.ஜ.க. அரசு ஆதரிக்க வேண்டுமென்று பல வகையிலும் வேண்டி நின்றார்கள். புலி ஆதரவு வைகோவும், இராமதாசும் பா.ஜ.க. கூட்டணியில் இருப்பதால் அவர்கள் நியாயத்தை எடுத்துச் சொல்லி பா.ஜ.க. அரசை ஈழ விடுதலையை ஆதரிக்குமாறு செய்துவிடுவார்கள் என்று நம்பச் சொன்னார்கள். பாசிச வெறியன் அத்வானியை அழைத்து வந்து மாநில சுயாட்சி மாநாடு நடத்தியதைக் கண்டு பூரித்துப் போய் வைகோவுக்குத் துதிபாடினார்கள். கார்கில் போர் வெறியன் பெர்ணாண்டஸ் ஈழ விடுதலையை ஆதரிப்பதாக பெருமைப்பட்டுக் கொண்டார்கள். புலி ஆதரவு - ஈழ விடுதலை ஆதரவு என்று சவடால் அடித்துவரும் இராமதாசை போராளி என்று போற்றி மகிழ்ந்தார்கள்.

ஆனால் இந்திய அரசோ, நாங்கள் ஈழ விடுதலைக்கு எப்போதும் எதிரிகள்தான் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டும் வகையில் தஞ்சமடைந்த அகதியை விரட்டியடிக்கிறது. ஈழத்திலிருந்து எந்தத் தமிழனும், இந்தியாவுக்குள் அகதியாக நுழைய விடாமல் கடற்படையைக் கொண்டு கண்காணித்து விரட்டுகிறது. அகதி முகாம்களை சிறைக் கூடமாக்கி ஒடுக்குகிறது.

இப்படி கழுதையாக எட்டி உதைத்தாலும் பதவி சுகத்துக்காக அதன் காலை நக்கிக் கொண்டு வைகோவும் இராமதாசும் பா.ஜ.க. கும்பலுக்கு ஒளிவட்டம் போடுகிறார்கள். தமிழினப் பிழைப்புவாதிகளோ, வைகோ - இராமதாசு துரோகக் கும்பலுக்கு ஒளிவட்டம் போடுகிறார்கள். இத்தகைய பிழைப்புவாத - துரோகக் கூட்டத்தை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், ஈழ அகதிகளின் அரசியல் - ஜனநாயக உரிமையைப் பறித்து அவர்களை விரட்டியடிக்கும் இந்திய அரசின் பாசிச காட்டுமிராண்டித்தனத்தைத் தகர்த்தெறிய முடியாது; நியாயமான தமிழின உரிமைக்கான போராட்டத்தைத் தொடரவும் முடியாது.

• குமார்

www.padippakam.com

## திருவள்ளூர் சாராய எதிர்ப்புப் போராட்டம்:

# சமூக உறக்கத்தைக் கிழித்த வீராங்கனைகள்

அதிகாரிக்கு மனு எழுதிப் போட வேண்டும் என்றாலும் சரி, இல்லை, சிக்கலான சில சில்லறைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றாலும் சரி, காலங்காலமாக நமக்குச் சொல்லப்பட்டு வரும் புத்திமதி, ''வெவரமானவனைப் போய்க் கேளுப்பா'' என்பதுதான். இந்த விவரமான பேர்வழிகள் யார்? என்ற படிமமும் நாம் அறிந்ததுதான். கிராமமாக இருந்தால் நாலு எழுத்துப் படிச்சவன், நாலு எடத்துக்குப் போயி வருபவன்; நகரமாக இருந்தால் ஆங்கிலம் கலந்து பேசத் தெரிந்த மிடுக்கான நடுத்தர வர்க்கத்து ஆசாமி.

'லோகத்து விசயங்கள்' எல்லாம் தங்களுக்கு அத்துப்படி என்று காட்டிக் கொள்வது இவர்களுக்குள்ள இயல்பு. அதே சமயம், எசகு பிசகான ஊர்ப் பிரச்சினையையோ, தெருப் பிரச்சினையையோ எடுத்துக் கொண்டுப் போய் நாம் இவர்களைப் பார்த்தால், ''என்னய்யா, விவரம் புரியாத ஆளா இருக்கே; இதையெல்லாம் மாத்த முடியாது; பேசாம, பொழக்கற வழியைப் பாரு'' என்று வாசல் கதவைக் காட்டுவது இவர்களிடம் உள்ள அதிசயமான ஒற்றுமை.

அதேசமயம், வெவரம் தெரியாதவர்கள், தற்குறிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள்தான், பல்வேறு சமயங்களில் தங்களது சொந்த முயற்சியின் மூலம், மாத்தவே முடியாது எனச் சொல்லப்பட்டதையெல்லாம் மாற்றிக் காட்டியிருக்கிறார்கள். அவநம்பிக்கை பிடித்த பேர்வழிகளின் மரமண்டையில் உறைக்கும்படி, இதற்குப் பல உதாரணங்களை எடுத்துப் போடலாம். ஆந்திராவில் சாராயக் கடைகளை எதிர்த்துப் பெண்கள் நடத்திய போராட்டம், சென்னை - சேத்துப்பட்டிலுள்ள ஜெகந்நாதபுரத்தில் கஞ்சா, கள்ளச் சாராயம் விற்பதைத் தடை செய்த அப்பகுதி மக்கள் நடத்திய போராட்டம் என்று நீளும் அந்தப் பட்டியலில், பீமன் தோப்பு கிராமத்தில் கள்ளச் சாராய சமூக விரோதக் கும்பலை எதிர்த்து தாழ்த்தப்பட்ட பெண்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு அசாதாரணமான இடமுண்டு!

***

பீமன் தோப்பு - சென்னைக்கு அருகில், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள இராமதண்டலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு. திருவள்ளூர் - பூண்டி பிரதான சாலையில் இருந்து நாலு கிலோமீட்டர் தூரம் உள்ளடங்கி அமைந்திருக்கிறது அந்தக் கிராமம். பீமன் தோப்பிற்குச் செல்ல பேருந்து வரட்டும் எனக் காத்திருக்க நீங்கள் முடிவு செய்தால், அது உங்கள் அதிருஷ்டத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதாகும். திருவள்ளூரில் இருந்து பீமன் தோப்புக்கு ஒரு நாளைக்கு மூன்று முறை பேருந்து சென்று திரும்புவதாகப் பேருந்து நிலையத்திலுள்ள கால அட்டவணை சொல்லுகிறது. ஆனால், கிராம மக்களோ, பஸ்ஸை நம்பியெல்லாம் பயணம் புறப்பட முடியாது என்கிறார்கள். இந்த இண்டர் நெட் யுகத்திலும், அக்கிராம மக்கள் வெளியுலகத் தொடர்புக்கு 'நடராஜா சர்வீசை'த் தான் நம்பியிருக்கிறார்கள்.

எல்லா இந்திய கிராமங்களைப் போலவே இந்தக் கிராமமும், ஊரும், சேரியுமாகப் பிரிந்து கிடக்கிறது. ஒட்டு மொத்தக் கிராமத்தின் பெயர் இராமதண்டலம்; சேரிக்கு பீமன் தோப்பு என்று தனிப் பெயர். சேரி என்று இழிவாகவும், காலனி என்று நவீனமாகவும் அழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்பை, பீமன் தோப்பைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் 'கண்டிகை' என்கின்றனர். கண்டிகை என்ற சொல்லுக்கு நிலப்பிரிவு என்று பொருள் சொல்லுகிறது தமிழ் அகராதி.

இராமதண்டலத்தைச் சுற்றியிருக்கும் வயல்வெளிகள், மேல் சாதியினரான நாயுடுகளுக்குச் சொந்தம். ஆனால், அவர்களில் யாரும் பெரும் நிலப்பிரபுக்கள் கிடையாது. பெரும்பாலான நாயுடுகள் நான்கு அல்லது ஐந்து ஏக்கர் பூமிக்குச் சொந்தக்காரர்கள். ஒரு சிலரிடம் மட்டும் பூமியோடு, டிராக்டரும் உண்டு. தாழ்த்தப்பட்டோரில் கடன் வாங்கத் துணிவு கொண்ட ஒரு சிலர் மட்டும், குத்தகைக்கு நிலத்தை எடுத்துச் சாகுபடி செய்கிறார்கள்; மற்ற அனைவருமே நாயுடுக்களை அண்டிப் பிழைக்கும் விவசாயக் கூலிகள்தான். சென்னைக்கு அருகில் இருந்தாலும், சொல்லிக் கொள்ளும்படி பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இப்பகுதியில் இல்லாததால், விவசாயக் கூலிக்குச் செல்லுவதைத் தவிர, அவர்கள் வயிற்றுப்பாட்டுக்கு வேறு வழியும் கிடையாது.

ஒரு குடும்பத்தில் கணவனும், மனைவியுமாகச் சேர்ந்து கூலி வேலைக்குப் போனால், அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்கும் கூலி எழுபது ரூபாய்; ஆனால், இந்த எழுபது ரூபாயும் அப்படியே ஒரு சல்லிக்காசுக் கூட குறையாமல் வீட்டுக்கு வந்துவிடாது. ஆண்கள் சம்பாதிக்கும் ஐம்பது ரூபாய் கூலி பெரும்பாலும் கள்ளச் சாராயத்தில் கரைந்து விடும்; பெண்கள் தங்களுக்கு கிடைக்கும் இருபது ரூபாய் கூலியைக் கொண்டு தான் குடும்பத்தை ஓட்ட வேண்டியுள்ளது.

கள்ளச் சாராயத்தால் ஏற்பட்ட இந்தப் பொருளாதார தாக்கு

தகவல் தொழில்நுட்பப் புரட்சி யுகத்திலும், போக்குவரத்து வசதி கூட கிடைக்காமல் இருக்கும் பீமன் தோப்பு.




படிப்பகம்



கள்ளச் சாராயக் கும்பலால் கொடூரமாகக் கொல்லப்பட்ட கிராம பெண்கள் முன்னணியைச் சேர்ந்த இந்திராணி (இடது) மற்றும் ரத்தினம்மாள்.

தலை விட, போதையோடு வீட்டுக்குத் திரும்பும் புருசன் கொடுக்கும் அடி - உதையை விட, கள்ளச் சாராயப் பேர்வழிகளைப் பிடிக்க வருகிறோம் என்ற பெயரால், அதிகார போதையில் போலீசு, காலனிக்குள் புகுந்து நடத்திய அடாவடித்தனங்களைத்தான் அப்பெண்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

தினந்தோறும் இருட்டு விழும் நேரத்தில் வேனை எடுத்துக்கொண்டு பீமன் தோப்பக்குள் புகும் போலீசு, தீடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழையும். வீட்டுக்குள் ஆம்புள யாராவது இருந்தால், ''டேய், நீ கள்ளச் சாராயம் காய்ச்சுறதா ஆதாரம் இருக்கு, ஏறுடா வண்டியில்'' என அள்ளிக் கொண்டு போய்விடும்.

உடனே பெண்கள் பீமன் தோப்பில் இருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் இராமதண்டலம் பஞ்சாயத்துத் தலைவி கிருஷ்ணவேணியிடம் போய் அழுவார்கள். அவர் அப்பெண்களைக் கூட்டிக் கொண்டு போலீசு நிலையத்திற்குப் போவார். போலீசார் சில சமயம் பஞ்சாயத்துத் தலைவியிடம், 'இந்த ஆள் சாராயம் காய்ச்சாதவன்' என எழுதி வாங்கிக் கொண்டு விட்டுவிடுவார்கள். சில சமயம் பஞ்சாயத்துத் தலைவியின் சர்டிபிகேட்டையெல்லாம் போலீசு ஏற்றுக் கொள்ளாது. உடனே பெண்கள், ஆளை வெளியே கொண்டு வர மார்வாடிக் கடையை நோக்கி ஓடுவார்கள். சில சமயம் போலீசு சட்டப்படி நடந்து கொள்ளும். பிடிபட்டவன் சிறைக்குப் போவான். அத்தாழ்த்தப்பட்ட பெண்கள் வீட்டுக்குப் போய், நீதிமன்ற அபராதத் தொகையைக் கட்ட ஏதாவது தேறுமா எனத் துழாவுவார்கள்.

படிப்பறிவற்ற அத்தாழ்த்தப்பட்ட பெண்கள், 'கள்ளச் சாராயத்தையும் ஒழிக்க முடியாது; போலீசு தொல்லையையும் தடுக்க முடியாது' எனத் தங்களின் விதியை நொந்து கொண்டு மூலையில் முடங்கிப் போயிருக்கலாம்; இல்லையென்றால், தங்களது அறியாமை, வறுமையின் காரணமாக, தினம் தினம் இப்படிச் செத்துப் பிழைப்பதை விட, ஒரேடியாகப்போய்ச் சேர்ந்துவிடலாம் என்ற விபரீதமான முடிவுக்குக் கூட வந்திருக்கலாம்.' ஆனால், அவர்களோ, இந்த இக்கட்டுகளையெல்லாம் தாண்டி ஒரு நேர்மறையான முடிவெடுத்தார்கள்.

பீமன் தோப்பில், தாழ்த்தப்பட்ட பெண்கள் மத்தியில் இயங்கி வந்த 'கிராமப் பெண்கள் முன்னணி' அமைப்பைக் கூட்டி, இராமதண்டலத்தில் கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட வேண்டும் என முடிவெடுத்தார்கள். தங்களின் முடிவை கிராமப் பஞ்சாயத்துக்கும், திருவள்ளூர் தாலுகா போலீசுக்கும் தெரிவித்தார்கள். தாங்களே நேரடியாகச் சென்று கள்ளச் சாராய பானைகளைப் போட்டு உடைத்தார்கள். இனி இராமதண்டலத்தில் யாரும் சாராயம் காய்ச்சி விற்கக் கூடாது என ஊர்க் கட்டுப்பாடு போட்டார்கள். அந்த முடிவை யாரும் மீறுகிறார்களா என்று தினந்தோறும் கண் காணித்து வந்தார்கள்.

கடந்த மூன்று, நான்கு மாதங்களாக கள்ளச் சாராயம் ஓடாமல் இருந்த பீமன் தோப்பிற்குள், வேறொரு வழியில் சரக்கு நுழைய முயன்றது. பீமன் தோப்பிற்கு அருகில் இருக்கும் கொரக்கந்தண்டலத்தைச் சேர்ந்த கள்ளச் சாராயக் கும்பல், பீமன் தோப்பையொட்டி ஓடும் ஆற்றங்கரையில் சாராயம் காய்ச்சி விற்க முயன்றது. இந்த விசயம் தெரிந்தவுடனேயே கிராமப் பெண்கள் முன்னணியின் தலைவி யசோதா, சாராயம் காய்ச்சும் இடத்திற்கு நேரடியாகவே சென்று சாராயக் கும்பலை எச்சரித்து வந்தார்.

தொடர்ந்து மூன்று நாட்களாக வந்து தங்களை எச்சரித்து விட்டுச் செல்லும் யசோதாவை எரிச்சலோடு பார்த்த சாராயக் கும்பல், நான்காம் நாள் (டிசம்பர் 6 அன்று) உருட்டுக் கட்டையால் அடித்துத் தூக்கிப் போட்டது. சாராயம் காய்ச்சும் இடத்திற்குத் தனியாகச் சென்ற தனது தாயைத் தேடிப் போன இந்திராணி, தனது தாய் அடிபட்டு அரைமயக்க நிலையில் கிடப்பதைப் பார்த்து, சாராயக் கும்பலோடு மோதினார். யசோதாவின் கண் முன்னேயே இந்திராணி அரிவாளால் வெட்டிக் கொல்லப்பட்டார்; இந்திராணியோடு வந்த அவரது பெரியம்மா ரத்னம்மாளின் தலையில் ஆற்றோரத்தில் கிடக்கும் துணி துவைக்கும் கல்லைச் சாராயக் கும்பல் தூக்கிப் போட்டதால், அவர் மூளை சிதறி இறந்து போனார். சிறிது நேரம் கழித்து இவர்களைத் தேடி வந்த ஆண்கள், சாராயக் கும்பலால் கொடூரமாக வெட்டப்பட்டு, ஆற்றங்கரையில் இருந்த முட்புதர்களிடையே வீசியெறியப்பட்டனர். இந்தப் பயங்கரத் தாக்குதலின் பின்னும், இந்த இழப்புகளின் பின்னும் அப்பெண்கள் கள்ளச் சாராயத்திற்கு எதிரான தங்களின் போராட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது.

கள்ளச் சாராயக் கும்பலால் அரிவாளால் வெட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட ஆண்கள்.





***

கள்ளச் சாராயம் பீமன் தோப்பைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட குடும்பங்களை நேரடியாகவே பாதித்தது அதனால், அத்தாழ்த்தப்பட்ட பெண்களுக்குக் கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்ட வேண்டிய கட்டாயம் எழுந்தது. இதை மட்டும் வைத்துக் கொண்டு, கள்ளச்சாராயக் கும்பலை அப்பெண்கள் எதிர்த்துப் போராடியதை அவர்களின் சொந்தப் பிரச்சினையாக, உள்ளூர்ப் பிரச்சினையாக முடிவு கட்டிவிட முடியுமா? யசோதாவின் ஒரே மகளான இந்திராணியும், அவரது அக்கா ரத்தினம்மாளும் வெட்டிக் கொல்லப்பட்

www.padippakam.com

டதை, ''அச்சச்சோ'' என இரண்டு 'உச்' கொட்டிவிட்டு, சர்வ சாதாரணமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? அந்த இரண்டு பெண்களின் தியாகமும், இயந்திர கதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முள் பச்சாதாபத்தைத் தவிர வேறு எந்த உணர்வையும் ஏற்படுத்தவில்லலையா?

கள்ளச் சாராயம் பீமன் தோப்பிற்கு மட்டுமே உரிய பிரச்சினையல்ல; தமிழகம் தழுவிய பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால் அது ஒருவிதத்தில் 'தேசிய' பிரச்சினை.

கள்ளச் சாராயமோ அல்லது சட்டப்படி விற்கப்படும் சீமைச் சாராயமோ, அது, அடித்தட்டு மக்களை, அவர்களது குடும்பங்களை, அவர்களது பெண்டு-பிள்ளைகளை மட்டுமே பாதிக்கக் கூடிய பிரச்சினையும் இல்லை. இதை ஒருவன் உணர்ந்து கொள்வதற்கு, அவன் வீட்டு ஆம்பள குடித்துவிட்டு வந்து, அவன் வீட்டுப் பெண்களை அடித்து உதைக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

கள்ளச்சாராய வியாபாரமாவது ஒதுக்குப்புறமாக, ஒளிவுமறைவாக நடந்து வருகிறது. ஆனால், நகர்ப்புறங்களில், மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலும், பள்ளிக் கூடங்களுக்கு அருகிலும், கோவில்களுக்குப் பக்கத்திலும் திறக்கப்பட்டிருக்கும் சீமை சாராயக் கடைகளோ பகிரங்கமாகவே சட்ட விதிகளுக்குப் புறம்பாக நடந்து வருகிறது.

அரசாங்கத்தின் சட்ட விதிகளை வைத்துக்கொண்டு பார்த்தால், இந்தச் சீமைச் சாராயக் கடைகளில் சரிபாதிக் கடைகளைச் சட்ட விரோதமானவை என முத்திரை குத்தி இழுத்து மூட வேண்டியிருக்கும். இந்தக் கடைகளில் தினசரி ஓடும் சரக்கில் சரிபாதி கள்ளச் சரக்குதான். இருட்டு விழுந்து விட்டாலோ அந்தக் கடை இருக்கும் தெருவே திறந்த வெளி ''பாராக'' மாறி விடும். தனியாகப் பெண்கள் நடந்து போவதற்கே இந்தக் கடைகள் அச்சுறுத்தலாக உள்ளன. ஆனாலும், நகர்ப்புறத்து படித்த நடுத்தர வர்க்கம் இந்தக் கடைகளைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொள்கிறார்களே தவிர, இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க முன் வருவதில்லை.

ஏன் இந்த ஒதுங்கும் போக்கு? இந்த சாராய அதிபாகள எல்லாம் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள்; எதையும் செய்யத் துணிந்தவர்கள் என்ற அச்சம்தான் இதற்கு முக்கிய காரணம். பீமன் தோப்புப் பெண்கள் எதிர்த்து மோதிய கள்ளச் சாராயக் கும்பல் கூட, தி.மு.க. தொடர்புடையவர்கள் என்று பத்திரிகைகள் எழுதியுள்ளன. ஆனால், அந்தப் பெண்களோ அந்தத் தொடர்பு பற்றியெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நான் இதைப் பற்றி அவர்களிடம் கேட்டபொழுது ''எந்தக் கட்சிக்காரனா இருந்தா, எங்களுக்கு என்ன? எங்களுக்கு சாராயம் ஒழிஞ்சாகணும்'' எனப் பட்டென்று சொன்னார்கள்.



**ஒரே மகளைப் பறி கொடுத்த பின்னும் கள்ளச் சாராயக் கும்பலை எதிர்த்துப் போராடி வரும் யசோதா.**

ஓட்டுக் கட்சிகளோடு தொடர்பு வைத்திருக்கும் இந்த சமூக விரோதக் கும்பலோடு மட்டுமல்ல, சட்டபூர்வ சமூக விரோதக் கும்பலான போலீசையும் அப்பெண்கள் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. கள்ளச் சாராயக் கும்பலுக்கும், போலீசுக்கும் இருந்து வரும் நெருக்கம் புதிதான செய்தி யில்லை. எனினும் பீமன் தோப்பு சாராயப் படுகொலைச் சம்பவம், கள்ளச் சாராயக் கும்பலைக் காப்பாற்றுவதற்கு போலீசார் எந்தளவுக்குத் தங்கள் அதிகாரத்தைக் கேடாகப் பயன்படுத்துவார்கள் என்பதை அம்பலப்படுத்திக் காட்டியிருக்கிறது.

பீமன் தோப்பில் இரண்டு பெண்களைக் கொலை செய்த கள்ளச் சாராயக் கும்பலுக்கும், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பென்னலூர் பேட்டை போலீசுக்கும் இடையே ''மாமூல்'' உறவு இருந்து வந்தது. இதனால் இந்த வழக்கைத் திசைதிருப்பிவிட வேண்டும் என்பதில் அப்போலீசார் மும்முரமாக இருந்தனர்.

இதற்காக, விசாரணை என்ற பெயரில் யசோதாவை மட்டும் தனியே அழைத்துச் சென்று, தனியறையில் அடைத்து வைத்துக் கொண்டார்கள். கொடிய பயங்கரவாதியை விசாரிப்பதைப் போல, டி.எஸ்.பி. புஷ்பராஜ் தலைமையில் 10, 15 போலீசார் யசோதாவைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு, அவரிடம், ''உன் ஒரே பொண்ணு கொல்லப்பட்டதற்கு நியாயம் கிடைக்கணும்னா அதை குடும்பத் தகராறுனு எழுதிக் கொடு'' என நைச்சியமாகப் பேசி, அவரைக் கரைக்க முயன்றார்கள்.

பாசம் - ''செண்டிமெண்டால்'' யசோதாவை வீழ்த்த முடியாமல் போகவே, அவர்கள், ''ஈமச்சடங்கு செய்ய உன் மக பொணம் உனக்கு வேணுமா, வேண்டாமா?'' எனப் பிணத்தைப் பிணையக் கைதியாக வைத்துக் கொண்டு பேரம் நடத்தினார்கள்.

இப்படி உருட்டலும், மிரட்டலும் தனியறையில் நடந்து கொண்டிருக்க, கள்ளச்சாராய ஒழிப்புப் பிரிவு டி.எஸ்.பி. பாரதிதாசன் மிகக் கீழ்த்தரமான நடவடிக்கையில் இறங்கினார். 'யசோதாவின் மகள் இந்திராணிக்கும் கள்ளச் சாராய கும்பலில் ஒருவனான நாகராசுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்ததாகவும், இப்பொழுது இந்திராணியை வேறொருத்தனுக்குக் கட்டிக் கொடுக்க நிச்சயதார்த்தம் நடந்ததால், தகராறு ஏற்பட்டு இந்தக் கொலை விழுந்து விட்டதாகவும்' பத்திரிகையாளர்களிடம் கூறி, போலீசின் ஈனப்புத்தியைக் காட்டிக் கொண்டார். அதுவும் போதாதென்று, யசோதாவும் ஏற்கனவே கள்ளச் சாராயம் காய்ச்சி விற்றவர்தான் என்ற அவதூறையும் அள்ளி விட்டது போலீசு.

கொஞ்சம் எண்ணிப் பாருங்கள் தனியறையில், தனியாளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் யசோதா; அவரைச் சுற்றி முன்பின் தெரியாத ஆண் போலீசு அதிகாரிகள்; ஒருபுறம் அவர்களின் உருட்டல் மிரட்டல்கள்; இன்னொருபுறம் செத்துப்போன தனது மகளின் நடத்தையையும் தனது நாணயத்தையும் கேவலப்படுத்தும், அசிங்கப்படுத்தும் அவதூறுகள். இந்தச் சூழ்நிலையில் தனியொரு பெண்ணாக நின்றுகொண்டு போலீசை எதிர்த்துப் போராட வேண்டும் என்றால், அதற்கு எத்தகைய மனவுறுதியும், துணிவும் வேண்டும்.

அத்தகைய மனவுறுதியும், துணிவும் யசோதாவிடம் இருந்தது. அதனால்தான் அவர், ''என் மகளும், அக்காவும் சாராயத்தை எதிர்த்துப் போராடி செத்துப் போனாங்க; அதனால், வழக்கை சாராயக் கொலையாகத் தான் பதிவு செய்ய வேண்டும்'' என விடாப்பிடியாகப் போராடினார். குடும்பத் தகராறு காரணமாக நடந்த கொலைச் சம்பவம் இது என போலீசார் முதல் தகவல் அறிக்கையைத் தயாரித்து கொண்டு, படிக்கத் தெரியாத யசோதாவிடம் அதைப் படித்துக் கூடக் காட்டாமல், அவரது கைநாட்டை வாங்க முயன்றபொழுது ''எங்க அமைப்பின் தலைவர் வரட்டும் பிறகு பார்க்கலாம்'' எனக் கூறி, கைநாட்டு வைக்க மறுத்து விட்டார்.

ஆனால், யசோதா குறிப்பிட்ட தலைவர்களான அண்ணாமலையும், தமிழ்ச்செல்வியும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கே உரிய மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்கும் இயல்பு காரணமாக, போலீசாரிடம் சமரசம் செய்து கொண்டனர். இதனால் போலீசார் முதல் தகவல் அறிக்கையில் யசோதாவும் பீமன்தோப்புப் பெண்களும் கள்ளச் சாராயத்திற்கு எதிராக உயிரைக் கொடுத்துப் போராடியதை உப்புக்குச் சப்பாணியாய்க் குறிப்பிட்டு விட்டு, குடும்பத் தகராறு காரணமாக நடந்த கொலையாக வழக்கைப் பதிவு செய்துவிட்டனர்.

பீமன்தோப்பு தாழ்த்தப்பட்ட பெண்கள் கள்ளச் சாராயக் கும்பலை எதிர்த்துப் போராடி அடைந்த வெற்றியை முழு உரிமை பாராட்டிக் கொள்ளும் இந்தத் தலை

www.padippakam.com

வர்கள், போலீசாரிடம் சமரசம் செய்து கொண்டதை, அந்தப் பெண்கள் தங்களின் முதுகில் குத்தியாக உணராமல் இருப்பது துரதிருஷ்டமானதுதான். கள்ளச் சாராயக் கும்பலையும் போலீசையும் துணிவோடும், மன உறுதியோடும், ஒற்றுமையோடும் எதிர்த்துப் போராடிய இந்தப் பெண்களிடம் தான் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நம்பிச் செல்லும் அறியாமையும், அப்பாவித்தனமும் நிறைந்து காணப்படுகிறது.

இந்த அறியாமையால்தான், பீமன் தோப்புப் பெண்கள் போலீசு என்ற அடக்குமுறை இயந்திரத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் 'பென்னலூர்பேட்டை போலீசு தான் மோசமானது; திருவள்ளூர் தாலுகா போலீசு நல்லவர்கள்' என்று அப்பாவித்தனமாகத் தரம் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பல்வேறு தன்னார்வக் குழுக்களும் ஒன்றிணைந்து, கிராமப்புற பெண்களைத் திரட்டி திருவள்ளூரில் நடத்திய ஊர்வலத்தில், ''கள்ளச் சாராயத்தை ஒழிக்க போலீசுக்கு அதிக அதிகாரம் வழங்கு'' என்ற முழுக்கத்தை முன் வைத்தன. அக்குழுக்கள் இம்முழக்கத்தை முன் வைக்க முடிந்ததற்கான அடிப்படை, அப் பெண்கள்மேலே நாம் கூறியபடி போலீசை அப்பாவித்தனமாகப் புரிந்து வைத்துக் கொண்டிருப்பதிலும், தன்னார்வக் குழுக்களின் கூட இருந்து குழி பறிக்கும் நரித்தனத்திலும் தான் அடங்கியுள்ளது.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க போலீசுக்கு அதிக அதிகாரம் வேணடுமாம்! எத்தகைய மோசடித்தனமான அபாயகரமான முழக்கம் இது. 'கொஞ்ச' அதிகாரம் இருக்கும் பொழுதே கள்ளச் சாராயக் கும்பலிடம் மாமூல் வாங்கி பழக்கப்பட்டுவிட்ட போலீசார், அவர்களின் தொழிலுக்கு பொது மக்களால் எவ்வித இடைஞ்சலும் வராமல் பாதுகாப்பு கொடுக்கும் போலீசார், அதிக அதிகாரம் வழங்கப்பட்ட பிறகு, கள்ளச்சாராயக் கும்பலை வேட்டையாடும் கடமை தவறாதவர்களாக மாறிவிடுவார்கள் என நம்புவதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்க முடியாது. பீமன்தோப்பு தாழ்த்தப்பட்ட பெண்களின் வீட்டுக்குள் புகுந்து, கள்ளச் சாராயம் காய்ச்சாத அப்பாவிகளைக் கூட இழுத்துக் கொண்டு போன போலீசுக்கு, இன்னும் அதிக அதிகாரம் வழங்கினால், போலீசின் அடாவடித்தனம் எந்த அளவுக்கு எல்லை மீறிப் போகும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்றால், போலீசுக்கு அதிக அதிகாரம் கொடுக்கக் கூடாது. மாறாக, போலீசிடம் இருக்கும் அதிகாரத்தைப் பிடுங்க வேண்டும். இதற்குப் பதிலாக, நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் கட்டியமைக்க வேண்டிய புரட்சிகர மக்கள் கமிட்டிகளுக்கே அதிகாரம் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். இந்த உண்மையை பீமன் தோப்பு தாழ்த்தப்பட்ட பெண்கள் இன்று இல்லாவிட்டாலும், நாளை உணர்ந்து கொள்வார்கள். ஏனென்றால், அந்தப் பெண்கள் இத்துணை இழப்புகளுக்கும் பின்னும் கள்ளச் சாராயத்தை எதிர்த்த போராட்டத்தைக் கைவிட்டு விடவில்லை.

கிராமப் பெண்கள் முன்னணியின் தலைவி யசோதாவை எடுத்துக் கொள்ளுங்கள், அவர் ஏற்கனவே கணவனை இழந்தவர். கூலி வேலைக்குச் செல்ல முடியாதபடி உடல் நலம் குன்றியவர். அதனால் தான் அவரது ஒரே மகளான இந்திராணி, திருமணமே செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து வந்தார். அப்படிபட்ட அன்பு மகளான இந்திராணியின் கொலைக்கு நீதி கிடைக்கும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. இத்தகைய பரிதாப நிலையில், தமிழக அரசு நட்ட ஈடாகக் கொடுத்திருக்கும் ஒரு இலட்ச ரூபாயை வங்கியில் போட்டு விட்டு, அவர் 'அக்கடா' என்று உட்கார்ந்து கொண்டிருக்கலாம். ஆனால், அவர் அப்படிக் கோழைத்தனமாக முடங்கிப் போய்விட வில்லை.

மாரி, தனது தாய் ரெத்தினம்மாள் இறந்து போய் விட்ட நிலையிலும், தனது தந்தை சாமிநாதன் கள்ளச் சாராயக் கும்பலால் அரிவாளால் வெட்டப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற போதும், அந்த துக்கத்தையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, கள்ளச் சாராயத்தை ஒழிக்க வீடு வீடாகச் சென்று கையெழுத்து இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தப் பெண்கள் யாரும் தங்களின் இழப்புகளைப் பற்றி பெரிதாகப் புலம்பவில்லை, மாறாக, கள்ளச் சாராயத்தை ஒழிக்க உதவி கேட்கிறார்கள்.

சொந்த இழப்புகளைவிட கொண்ட கொள்கை பெரிதென்று நினைக்கிறார்கள் அப்பெண்கள். 'தானைத் தலைவர்', 'புரட்சித் தலைவி', 'மக்கள் தலைவர்' எனப்பல வித பட்டப் பெயர்களோடு உலா வரும் எந்த வொரு ஓட்டுக்கட்சி அரசியல்வாதியிடமாவது இந்த குணத்தைக் காண முடியுமா?

இந்திராணி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்பொழுது, அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல எந்தவொரு நாயுடுவும் டிராக்டர் தர மறுத்துவிட்டார்கள். ஒருபுறம் மேல் சாதியினரின் இரக்கமற்ற, கொடூர, பிற்போக்குத்தனம்; இன்னொருபுறம் ஊர் நன்மைக்காகப் போராடும் தாழ்த்தப்பட்டவர்களின் பெருந்தன்மை. இங்கே, சமூகரீதியாக உயர்ந்து நிற்பது யார்?

திரைப்படத்தில் சமூக விரோதிகளைத் தூக்கிப் போட்டுப் பந்தாடும் ''ஹீரோ''க்கள் நிஜவாழ்க்கையில் அக்கிரமங்களுக்குப் பயந்து நடுங்கும் பேடிகளாக இருப்பதை ''பாலிவுட்'' அம்பலப்படுத்திவிட்டது. இதன் பிறகும் கூட, அவர்களை ''சூப்பர் ஸ்டார்'', ''சுப்ரீம் ஸ்டார்'' எனப் பூஜிக்கும் இளைஞர்கள், திரைப்படக் கதாநாயகியைப் போல, மாடல் அழகிகளைப் போல உடல் வனப்பைப் பேணத் துடிக்கும் இளம் பெண்கள்; ''சூப்பர் மேன்'' போல யாராவது ஒருவன் வந்து இந்த சமூகப் பிரச்சினைகளில் இருந்து நம்மை மீட்டு விட மாட்டானா என ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் - இவர்களெல்லாம் இந்தக் கிராமப்புற, படிப்பறிவற்ற, தாழ்த்தப்பட்ட பெண்களிடமிருந்து கற்றுக் கொள்ள ஏராளமிருக்கிறது.



**கள்ளச் சாராயத்தை ஒழிக்க வக்கற்ற போலீசை அம்பலப்படுத்தி கிராமப்புறப் பெண்கள் திருவள்ளூர் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

• பிரகாஷ்

**உதவி:**

**✱ சத்யா**
**(பெண்கள் விடுதலை முன்னணி)**
**✱ துரை (ம.க.இ.க.)**
**✱ லோகநாதன் (பு.ஜ.தொ.மு.)**


படிப்பகம்

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

உள்ள ஐந்து மாதங்களில், இந்தியா ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து வாங்கிய கடனுக்கு கட்டிய வட்டியும், அசலும் 350 கோடி அமெரிக்க டாலர்கள். இதை ஈடு செய்வதற்குத்தான் உலக வங்கி கடன் தொகையை உயர்த்தியது. கடனை அடைக்க கடன் வாங்குவது என்பது தான் தாராளமயம் படைத்திருக்கும் சாதனை!

## தேயிலை இறக்குமதியின் அடுத்த பலி

சிறு தேயிலை விவசாயிகளைப் போண்டியாக்கிய தேயிலை இறக்குமதி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வயிற்றலடிக்கக் காத்திருக்கிறது. தேயிலை இறக்குமதியால் தேயிலை விலை வீழ்ச்சியடைந்திருப்பதைக் காட்டி, தேயிலைத் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களின் சம்பளத்தை 25 சதவீதம் குறைத்துவிடத் தீர்மானித்துள்ளனர். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படிக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்சகூலியைக் கூடத் தராமல் மோசடி செய்து வரும் தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு, தேயிலை இறக்குமதி என்பது ஒரு நொண்டிச் சாக்குதான். வால்பாறையிலும், நீலகிரியிலும் உள்ள தேயிலை எஸ்டேட்டுகளில் பணியாற்றி வரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் முதலாளிகளின் இம்மிரட்டலையும், தேயிலை இறக்குமதியையும் எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.



கடனை உயர்த்திக் கொடுத்து, இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றிய உலக வங்கித் தலைவரைக் கட்டிப் பிடித்து ஆனந்தப்படும் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா.

## பெண்களைப் பலி கேட்கும் 'குடும்ப மானம்'

தங்களின் உரிமைகளைப் பெறுவதற்காக கணவனை, தந்தையை, சகோதரனை, மதவெறி சமூக அமைப்பை எதிர்த்து நிற்கும் பெண்களை, ''குடும்ப மானத்தைக் காப்பாற்றுவது'' எனும் பெயரில் படுகொலை செய்யும் மிருகத்தனம் பாகிஸ்தானில் சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது. இப்படுகொலைகளைச் சட்டம் கண்டும் காணாமல் விட்டுவிடுவதால், கடந்த ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் 240 பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் கணவனால் 59 பெண்களும், மாமனார், மைத்துனர் போன்ற உறவினர்களால் 54 பெண்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். பெற்ற மகனால் 10 தாய்மார்களும், உடன் பிறந்த சகோதரனால் 81 சகோதரிகளும் இறந்து போயினர். 9 வயது சிறுவன் கூடத் தனது அக்காவைக் குத்திக் கொலை செய்துவிடும் அளவிற்கு முஸ்லீம் மதவெறியும், ஆணாதிக்கமும் பாகிஸ்தானைப் பிடித்தாட்டுகிறது.

## நீதிமன்றத்தின் கரசேவை

மும்பய் நகரத்தை அழகுபடுத்தும் திட்டத்தின்படி, அந்நகரையொட்டி அமைந்துள்ள சஞ்சய்காந்தி வன விலங்குகள் சரணாலயப் பகுதியில் பல ஆண்டுகளாக வசித்து வந்த பல நூறு குடும்பத்தினர் அடித்துத் துரத்தப்பட்டுள்ளனர். அக்குடும்பத்தினரை வலுக்கட்டாயமாக வெறியேற்றுவதற்காக, முதலில் அப்பகுதியில் இயங்கி வந்த மருத்துவமனைகளும், பள்ளிக் கூடங்களும் இழுத்து மூடப்பட்டன. அடுத்ததாக, அப்பகுதிக்குக் குடிநீரும், மின்சாரமும் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது. இறுதியாக, குடிசைகளைப் பிய்த்தெறிய போலீசு பட்டாளம் இறக்கப்பட்டது. இப்பட்டாளத்திற்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் தலைமை தாங்கினர். இதுவும் போதாதென்று, இராணுவ ஹெலிகாப்டர்கள் தாழப் பறந்து, குடிசைகள் இடிக்கப்படும் 'கரசேவையை'க் கண்காணித்தன. எதிரி நாட்டின் மீது படையெடுத்தது போல, இந்தக் குடிசைகளை இப்படிதான் இடித்துத் தள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டவர்கள் மும்பய் உயர்நீதி மன்ற நீதிபதிகள் என்பது தான் கவனிக்க வேண்டிய விசயம்!

## கணிணி யுகமா? காட்டுமிராண்டி யுகமா?

பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் சமீபத்தில் குழந்தைத் திருமணமொன்று நடந்தது. இரகசியமாகவோ, ஒளிவு மறைவாகவே இன்றி வெளிப்படையாக நடந்த அத்திருமணத்தில், அமைச்சர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். கடந்த மூன்றாண்டுகளில் இந்தி மொழி பேசும் மாநிலங்களில் 150 குழந்தைத் திருமணங்கள் நடந்திருப்பதாக அரசே ஒப்புக் கொள்கிறது. மழலைத் தம்பதிகளை அமைச்சர்களே வாழ்த்திவிட்டுத் திரும்பும் பொழுது, குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் காகிதப் பூச்சாண்டிதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒருபுறம் கணிணிப் புரட்சி; இன்னொரு புறமோ குழந்தைத் திருமணம் என்ற மத்திய கால காட்டுமிராண்டித்தனம் - இது, வேடிக்கையான முரணா?

**ஆறு வயதான கௌரிக்கும் ஒன்பது வயதான சுரேஷுக்கும் ம.பி. மாநிலத் தலைநகர் போபாலுக்கு அருகேயுள்ள ரத்னாநகர் என்ற கிராமத்தில் வெளிப்படையாக நடந்த சட்ட விரோத குழந்தைத் திருமணம்.**



## வெடிக்கக் காத்திருக்கும் அணுகுண்டு

மகாராஷ்டிர மாநிலம்தான் இந்தியாவிலேயே தொழில்துறை வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகக் கருதப்படுகிறது. இந்தப் 'பெருமை'யின் இலட்சணம் எப்படியிருக்கிறது தெரியுமா? அம்மாநிலத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, வேலைக்காகக் காத்திருப்போரின் எணணிக்கை 43 இலட்சம். இவர்களில் வெறும் 22,000 பேருக்குதான் அரசுத் துறைகளில் கடந்த ஆண்டு வேலை கிடைத்தது. அதேசமயம், தனியார் துறையைச் சேர்ந்த மூன்று இலட்சம் தொழிலாளர்களின் வேலை, ஆட்குறைப்பு என்ற பெயரில் பறிக்கப்பட்டது. தமிழகத்தில் பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கும் வேலையில்லாப் பட்டாளத்தின் எண்ணிக்கை 45 இலட்சத்தை எட்டிப் பிடித்துவிட்டது. நிரந்தர வேலை கொடுக்க முடியாத பொருளாதார வளர்ச்சியால், மக்களுக்கு என்ன பலன்?

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG- 544 / 2000



# இதுதான் இன்றைய இந்தியா

இந்தப் படத்தில் நாம் காணும் "டைடல் பூங்கா" என்று அழைக்கப்படும் கண்ணைப் பறிக்கும், பிரம்மாண்டமான இந்தக் கட்டிடம், பன்னாட்டு மற்றும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மென் பொருள் தயாரிப்பில் ஈடுபடுவதற்காக தமிழக அரசால் சென்னையில் கட்டப் பட்டு, ஆறு மாதங்களுக்கு முன்பு கோலா கலமாகத் திறக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்கு ஆன மொத்த செலவு 338 கோடி ரூபாய்.

மின்சாரம் நின்று தொழில் பாதிக்கப் படாமல் இருக்க தனியாக மின்சார வசதி; தனியாகத் தொலைபேசி வசதி, நேரடி செயற்கைகோள் இணைப்பு என இந்தக் கட்டிடத்தில் தொழில் தொடங்கியுள்ள முதலாளிகளுக்கு செய்து கொடுக்கப் பட்டுள்ள வசதிகள் ஏராளம்.

இந்தத் தொழில்நுட்ப வசதிகள் ஒருபுறமிருக்க, இந்த நிறுவனங்களில் வேலை பார்க்கும் கணிணி தொழில்நுட்ப வல்லுநர்கள் உழைத்துக் களைத்துப் போனால், அவர்கள் இளைப்பாறவும், புத்துணர்ச்சி பெறவும் நீச்சல் குளம், உடல் நலம் பேணும் விடுதிகள் என உல்லாச வசதிகள் வேறு. இப்படிபட்ட வசதிகள் இருந்தால்தான் உங்கள் மாநிலத்தில் முதலீடு செய்வோம் எனப் பன்னாட்டு நிறுவனங்கள் நிபந்தனை விதித்தன. தமிழக அரசு தண்டனிட்டு செய்து கொடுத்தது.

இந்தப் படத்தில் உள்ள அனைவரும் சென்னையைச் சேர்ந்த சிறு வியாபாரிகள். தங்களுக்கு சென்னை மாநகராட்சி கடை கள் கட்டித்தர வேண்டும் எனக் கோரி இவர்கள் போராடுகிறார்கள். இவர் களொன்றும் அந்த வசதி செய்து கொடு, இந்த வசதி செய்து கொடு என நிபந்தனை யெல்லாம் விதிக்கவில்லை. இவர்கள் கேட்பதெல்லாம் மூன்று பக்கம் சுவரும், ஒரு கதவும், மேலே கூரையும் கொண்ட, பாதுகாப்பான ஒரு சிறிய கடை. இவர் களின் இந்தச் சாதாரண கோரிக்கையை சென்னை மாநகராட்சி கன்டு கொள்ளவே யில்லை. அதே சமயம், நகரத்தை அழகு படுத்துவது என்ற பெயரில் நடைபாதை யில் வியாபாரம் செய்து பிழைத்து வரும் இவர்களின் வயிற்றில்தான் அடித்து வருகிறது.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு செய்து கொடுக்கும் வசதிகளை, வேலை வாய்ப்பு, அந்நியச் செலாவணி வருவாய் என நியாயப்படுத்துகிறது தமிழக அரசு. 338 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடத்தில் 8000 பேருக்கு வேலை கிடைத்தாலே அதிசயம் தான்; இங்கு தயாரிக்கப்படும் மென் பொருட் களும் தமிழக மக்களின் தேவைக்கானது அல்ல. தமிழனின் வருமானத்துக்கே வழி யில்லாதபொழுது, அந்நியச் செலாவணி வருவாய் எனக் கூப்பாடு போடுவது வக்கிரமானது.

ஆனால், நடைபாதை வியாபாரம் தான் இலட்சக்கணக்கான தமிழர்களுக்கு சுய வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக் கிறது. ஏழைத் தொழிலாளர் குடும்பங்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருட் களை வாங்க நடைபாதைக் கடைகளைத் தான் நம்பியுள்ளனர்.

இப்படி தமிழர்களின் நலன், தமிழகத் தின் பொருளாதார வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்து கிடக்கும் நடைபாதை சிறு வியாபாரிகளுக்கு கடை கூடக் கட்டித் தரமாட்டேன்; பன்னாட்டு முதலாளி களுக்கு தான் நவீன வசதிகளையும், வரிச் சலுகைகளையும் வாரிக் கொடுப்பேன் என்றால், நாமெல்லாம் இரண்டாந்தர குடிமக்களா? உலகமயம் என்ற பெயரில் நடந்து வரும் இந்த ஓரவஞ்சனையையும், எட்டப்பர் கூட்டம் நம்மை ஆள்வதையும் இனியும் பொறுத்துக் கொள்ளலாமா? ✱

